போன் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4642

# திராவிடநாடு

மலர் 13 | 13—2—55 | இதழ் 32

## முதலில் தாயகம்! பிறகே அகிலம்!

"ஏண்ணே! நீயே சொல்லு. இத்தனை வருசமா, நீயும் நானும் அந்த ரஷ்யாவைப்பற்றி என்ன நினைச்சுக் கிட்டிருக்கோம். ஏழைங்க பக்கம் பேசற தேசம்; பணக்காரங்களின் பச்சைச் சிரிப்புக்கு அசையாத தேசம்—அப்படி இப்படீன்னுதானே நினைச்சுக்கிட்டிருக்கோம். அது, இந்தியாவைப்பற்றி என்னென்னமோ புகழ்ந்து எழுதியிருக்குதாம், பேப்பர்லே. "பிராவ்தா சொல்லுகிறது" ன்னு, பெரிசா போட்டிருக்காங்களாம். அஞ்சு வருஷ 'குடியரசு' ஆட்சியிலே அதைச் சாதித்தாங்க, இதைச் சாதிச்சிருக்காங்க—அணையைக் கட்டிஞங்க, மின்சாரத்தை அதிகப் படுத்திஞங்க, நெல், அமோகமா விளையுது, துணி உற்பத்தியிலே முதலிடத்திலே நிக்குது, எரு உற்பத்தி செஞ்சு கொட்டுருங்க, எங்க பார்த்தாலும் கட்டுருங்க ஆலைகளை—அப்படி இப்படீன்னு, இந்தக் காங்கிரஸ் சர்க்காரைப்பற்றிப் புகழ்ந்து எழுதியிருக்குதாம். அதைப்பற்றிக் கேட்டேன். 'என்ன அண்ணாச்சி! நீங்க, இப்படி திட்டு திட்டுன்னு திட்டுறீங்க—ஏன் 'ரஷ்யா' இப்படி எழுதுது ன்னு' கேட்டேன். அதுக்கு, அவர், என்னை முறைக்கிருரு; இங்கிலீஷ் வார்த்தையிலே, எதெதையோ சொல்ருரு. ஏண்ணே, நான் கேட்டது தப்பா. காங்கிரஸ் சர்க்காரு, என்ன நன்மையைச் செஞ்சாங்க என்கிற விசயம்தான் உனக்கும் எனக்கும் நல்லாத் தெரியும். அது பெருகிட்டு, இது பெருகிட்டுன்னு சொல்ருங்க! நம்ப வயிறு என்னமோ, என்னைக்கும் போலத்தான் இருக்குது. என் மவன் ஒரு கூலி வேலை கிடைக்குமான்னு, சுத்து சுத்துன்னு சுத்திக்கிட்டுதான் இருக்கிருன். நம்ப பொழப்பு, இப்படி இருக்குது. ஆனா, அந்த ரஷ்யா இப்படிப் பாராட்டலாமாண்ணே. அதைப் பற்றித்தான் கேட்டேன். அதுக்குக் கோபம் வருது"

※

என்று கூறிஞன், மிரட்சியோடு வந்த என் நண்பன்! அவன், உங்களைப்போல, என்னைப்போல 'சராசரி வர்க்கம்!

மிரட்சிக்குக் காரணம் புரிந்தது—ஏனெனில், அவன் சுட்டிக்காட்டிய இடத்திலே, 'காம்ரேட்' நின்று கொண்டிருந்தார்.

அவரிடம் போய் ஏதோ கேட்டிருக்கிருன்! அவருக்கு 'கோபம்' வந்திருக்கிறதுபோலும்!!

உண்மையில், 'காம்ரேட்'களுக்கு, கோபம் வரக்கூடிய நேரம்தான் இது.

ஏனெனில், எந்த இந்தியாவின் அரசைப்பற்றி அவர்கள், தீப்பொறி பறக்கும் கண்டனங்களை வீசுகிருர்களோ, அதே ஆட்சியை 'ரஷ்யா' புகழ்கிறது வாழ்த்துகிறது!!

அதோ, மத்யப் பிரதேசத்தில் அமையப்போகிறது, இரும்பாலை - ரஷ்ய உதவியுடன்!

இதோ, ரஷ்யநாட்டு குரல் 'பிராவ்தா' தலையங்கம் தீட்டிப்பாராட்டுகிறது, இந்திய சாதனைகளை.

ரஷ்யா, இந்தியாவைப் போற்றுகிறது—புகழ்கிறது.

பொதுவுடைமை பூத்த நாடு, தனியுடைமை நாட்டை, வாழ்த்துகிறது—போற்றுகிறது.

ரஷ்யா, முதலாளிகளை ஒழித்த நாடு! அது, முதலாளிகளின் தோட்டமாக இருக்கும் நேருவின் தலைமையைப் பாராட்டுகிறது—ஏழாண்டுகளில் ஏராளமான காரிய சாதனைகள்—என்று வாழ்த்துகிறது.

இத்தனைக்கும், இந்தியா சீனுவல்ல! இப்போதுதான், அந்தப் பக்கம் போய் விட்டு வந்த நேரு, திருதிருவென விழித்தபடி, தன் மனதுக்கு சாந்தி தேடிக்கொள்வதுபோல, ஏதேதோ சொல்லிக்கொண்டிருக்கிருர்!

இந்த நிலையில், இந்தளவுக்கு ரஷ்யா பாராட்டுவானேன்?—இப்படியெல்லாம், காங்கிரஸ் ஆட்சியைப் புகழ்வானேன்?

காங்கிரஸ், இந்த ஏழாண்டுகளில் கொளுத்திய செங்கொடிகள், ஒன்ரு! இரண்டா!

சுடுகாட்டுக்கு அனுப்பிய தோழர்களின் பட்டியல்தான் சிறியதா!

கட்சியையுமன்ரே தடைசெய்து—கண்ட கண்ட இடத்தில் அடித்துத் துவைத்தது.

களப்பால் குப்பு - இரணியன் - சிவராமன்—இவர்களுக்கேற்பட்ட கதியை நினைத்தால், குலை நடுங்குகிறதே இன்னும்.

'மணலி'யையும் பிறரையும் சுட்டு

---

### பொதுக்குழுக் கூட்ட அழைப்பு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 20—2—1955 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு, கோவைக்கடுத்துள்ள பேரூரில் நடைபெறும். அதுபோது பொ. கு. உறுப்பினர்கள் வருகை தந்து, நடவடிக்கைகளில் கலந்துகொண்டு, சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஆய்வுக்கு வருபவை: 1. நாடகத் தடைச் சட்டம், 2. மாநில மாநாடு.

அன்பன்,
அண்ணாதுரை
பொதுச்செயலாளர்.

அல்லவா வீழ்த்தச் சொன்னார், பட்டேல்.

இடிபட்ட ஏழைகள் வீடுகள் எத்தனை! துவைக்கப்பட்ட ஏழை விவசாயிகள் தொகை கொஞ்சமா! சிறையுமன்றோ 22 உயிர்களைக் குடித்தது, இந்தச் சீலர்கள் ஆட்சியில்!

இத்தனை அக்கிரமங்களையும் செய்த காங்கிரஸ் - ஐந்தாண்டில் சாதித்ததாமே சாதனைகளை! இதற்கு 'சர்ட்டிபிகேட்' தருகிறதே, ரஷ்யா! இதென்ன அலங்கோலம் என்று எண்ணவே செய்வர், மக்கள்.

அவர்களது ஐயத்தை, அலட்சியப் படுத்திவிடமுடியாது.

ஏனெனில், அந்தளவுக்குக் காரியங்கள் நிகழ்ந்து வருகிறது.

*

"வா, அப்படி வழிக்கு, இப்போது உணர்கிறாயா, நீ? எங்கள் நேருவை யாரென்று நினைத்தாய்! பார், ரஷ்யாவே பாராட்டுகிற அளவுக்குச் செய்துவிட்டார். இவரல்லவா, ராஜதந்திரி. இந்தக் கம்யூனிஸ்டுகளைவிட நீ அல்லவா மாஸ்கோகீதம் பாடினாய் — அதிகமாக. இப்போது, தெரிந்துகொண்டாயா, 'மாஸ்கோ' எதுவென்பதை!"

*

இப்படியொரு வீச்சு வீச முயலலாம், தேசீய நண்பர்கள். வெறும் வாயையே மெல்லுவோருக்கு, அவலும் கிடைத்திருக்கிறதே இப்போது- ஆகவே, ஆனந்தக் களிப்போடுகூட அணுகுவர், வாதாட.

அத்தகைய நிலை உண்டாகியிருக்கிறது, இப்போது. உண்மை; மறுக்கவில்லை.

வெளிநாட்டுக் கம்யூனிசம், பண்டிதரின் பாராட்டைப் பெறுகிறது. அதே வாயால், இங்குள்ள கம்யூனிஸ்டுகளை துரோகிகள், தேச நலன் விரும்பா சமயசஞ்சீவிகள்—என்கிறார். மாலெங்கொவ், மாஸ்கோ தூதருடன் அளவளாவுகிறார், அங்கே. இங்கே! இதோ தேபர்' ஆந்திராவில் 'கம்யூனிஸ்டுகளுக்கு' சமாதி எழுப்பப்போகிறோம் என்று கர்ஜிக்கிறார்.

இதைப் பார்க்கும்போது, மக்களுக்கு மனமயக்கம் உண்டாகிறது. முன் பக்கம் பார்த்தால் குதிரையாக இருக்கிறது - பின் பக்கமோ எருமையாகத் தென்படுகிறதே — இதென்ன ஆச்சரியம், என்று குழம்புகின்றனர்.

பண்டித நேருவைப்பற்றியல்ல இந்த வியப்பு-அவரையும், அவர் காற்றடிக்கும் திக்கில் சஞ்சரிக்கும் அதியற்புதர் என்பதையும் அறிவர், மக்கள். ஆனால், மாஸ்கோ?—இதுவே மனதைக் குடைகிறது. நீதிக்குப் போராடும் ரஷ்யா — அநீதியைக் கண்டிக்கும் பாட்டாளிகள் அரசு — பண மூட்டைகளுக்கு வேட்டு வைத்த விடுதலைபுரி — உல்லாசிகளை உலர்த்திக் காயப்போட்ட இலட்சிய பூமி — அதுவே நமக்குத் தாரக மந்திரம்-அது சென்ற பாதையே நமக்குக் கலங்கரை விளக்கம்—பாரீர், மாஸ்கோவை— செஞ்சதுக்கத்தில் திரண்டிருக்கும் சேனைகளைப் பாரீர்— அவை யாவும், உலக விடுதலையின் தூதுப் படைகள் - உலகத்தின் எந்த மூலையிலே ஆதிக்க அரசும் பணுதி பத்யமும் அரசோச்சினாலும், சகிக்காது அது—என்றெல்லாம், சண்டமாருதப் பிரசங்கம் செய்துவந்ததால், இன்று அது நேருவையும் அவரது ஆட்சியையும் வாழ்த்தும்போது, பிரசங்கத்தைக் கேட்டு, 'நம்ம ரஷ்யா' என்று உரிமை கொண்டாடி, உள்ளத்தில் அதன் பெயரை ஜபித்தவண்ணம் கிடக்கும் மக்களிடையில், ஒரு குழப்பம் உண்டாகிறது.

கேள்விக் குறியுடன், பார்க்கின்றனர், இந்த நாட்டு கம்யூனிஸ்டுத் தோழர்களை.

ஏனெனில், இப்படி 'மாஸ்கோ' பாராட்டுகிறதே யொழிய, இங்குள்ளோர் நேருவின் ஐந்தாண்டு 'குடியரசு' ஆட்சியின் சாதனைகளைப் பிய்த்துப் பிய்த்து அலசுகின்றனர். அக்னி பொறி பறக்கிறது, அஜாய் கோஷ் பேச்சில்! புள்ளி விவரங்களாகக் கொட்டுகிறார், ராமமூர்த்தி! அள்ளி வீசுகிறது, ஆத்திரமும் ஆவேசமும் கலந்த ஆதாரங்களை, 'நியு ஏஜ்' ஏடு. அதை, மொழி பெயர்த்து, முழக்குகிறது, 'ஜனசக்தி'. ஆனால், மாஸ்கோவோ, கட்டியணைத்துக் கானம் பாடுகிறது, பண்டிதரை!

பண்டிதரின் ஆட்சியை அமெரிக்க ஐசனும், பிரிட்டிஷ் ஈடனும், நேற்று வரை 'அரசு' புரிந்த பிரான்ஸ் பிரதமர் மெண்டசும், பாராட்டுவதில், வியப்பில்லை! ஆனால், மாஸ்கோ பாராட்டுகிறது!! ஏழாண்டு சுதந்திர ஆட்சியில், அரியபெரிய சாதனைகளைச் செய்திருக்கிறதாம்—"பிராவ்தா" புகழ்கிறது, இவ்விதம்.

இதனைக் காணும்போது, தவறு என்று சொல்லி, தகாதவர்கள் எனும் பட்டத்தைச் சூட்ட விரும்பவில்லை, நாம்.

பார், பார்! ரஷ்யா, கெட்டுவிட்டது!! — என்று கூறிக் கெக்கலிக்கவும், விரும்பவில்லை.

சந்தர்ப்பத்தை, வேலாகவும், வாளாகவும் ஆக்கி, நம்போன்றோர்மீது வீச முயலலாம்—ரஷ்ய வாடையை, விரும்பாத, மனதினர். அவர்கள், விஷய விளக்கம் பெறுதவர்கள்!

இவ்விதம், ரஷ்யா வாழ்த்துவதால், நாளையே இங்குள்ள 'பிர்லா'வுக்கும் 'ஷராப்'புக்கும், மாஸ்கோ இடமளித்துவிடாது, கம்யூனிச எல்லையை நோக்கி நாங்கள் போடும் நடை தவறெனக் கண்டுகொண்டோம்! இனிமேல், நேருவின் 'சோஷியலிச மாதிரியில்......' நாங்களும் நடப்போம்!! — என்கிற முடிவுக்கு வந்துவிடாது. அது, பழுத்த பழம், முதிர்ந்த நாடு! எனினும், இன்றுள்ள உலக அரங்கில், அது இவ்விதம் நடக்கவேண்டிய கட்டத்திலிருக்கிறது. ஊரிலிருக்கும் நல்லவனை, வீதி சுற்றும் கேடி எதிர்க்கிறான் என்றால், அந்த'கேடி'க்கு ஆதரவளிப்பவனை அழைத்து, உத்தமா! உதாரா! உன் சக்தி யாருக்கு வரும்? ஒரு குத்தில் நாலுபேரைச் சாய்க்கும் வல்லவனாச்சே, நீ! என்று பாராட்ட நேருவதுண்டல்லவா, சில வேளைகளில். அதுபோலத்தான், இதுவும்! நல்லவன், 'கேடி'யின் பலம் குறைவது. தனக்குவரும் ஆபத்தின் அளவு குறைவதாகத்தான் எண்ணுவான். அதற்காக, 'தட்சணை'யும் அளிக்க நேருவதுண்டல்லவா! அதுதான், 48-கோடி ரூபாயில் ரஷ்யா அளிக்கும் இரும்பாலை!

இதனால், நேற்றுவரை 'கேடி'யின் பக்கம் சாமரம் வீசிவிட்டு, இன்று நல்லவனும் நாக்கில் தேன் தடவுகிறான் என்றதும் ஓடிவரும் கையாளின் சபல புத்தி விளங்குகிறதே ஒழிய—நேருவின் மேதா விலாசத்தின் அளவும் யூகமும் அல்ல, தெரிவது.

"கையாள்" நிலைக்கு, 35-கோடி மக்கள் வாழும், இந்தப் பெரிய பூபாகத்தைக் கொண்டுவைத்திருக்கும் 'புண்யம், நேரு 'துரை'யால், நாம் பெற்ற பரிசாகும்!

எப்படியோ, எவ்விதமோ!—விடுதலை அடைந்த இந்தியாவை, இப்படியொரு இக்கட்டான நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டனர் — காங்கிரஸ் மேதைகள்,

'குருக்ஷேத்திரம்' ஆகிவிட்டது.

(16-ம் பக்கம் பார்க்க)


## மதுரை மாவட்டத் தோழர்களுக்கு

நாளது 13—2—55 ஞாயிறு காலை 10-மணிக்கு மதுரை நகர் தி. மு. கழக அலுவலகத்தில் (4-கட்டுபானையம்) நடைபெறும் வரவேற்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன்.

பொருள்:- மாநாட்டு வரவு செலவு.

எஸ். முத்து
செயலாளர்

தொடர் சித்திரம்

# கடிகாரம்

12

அண்ணல்

“எந்தரயில்வே ‘கேட்டு’க்கருகில் நான் அலறியபடி சாய்ந்தேனோ, அங்கே அவர்களும் இருந்தார்களாம், வில்வண்டியில். நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், அலறிக்கொண்டு விழுந்த என்னையும் பார்த்துக்கொண்டிருந்தார்களாம்! அதனால், மூர்ச்சித்து விழுந்த என்னை, வண்டியில் வைத்து, தங்களுடைய வீட்டுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று, அவர்கள் உரையாடல் மூலம் புரிந்துகொண்டேன். மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தேன்!”

*

தன் மனைவி நாச்சி, தன்னிடம் கூறியதை, பெருமூச்சுகளுடன் வட்டிக்கடைக்காரனை என்னிடம் சொல்லிவந்த பைத்யம், கொஞ்சம் நிறுத்தினான். கதை சொன்னதால் ஏற்பட்ட களைப்பு என்று தெரிந்தது! ஒரு கடிகாரத்தைச் சுற்றி, இவ்வளவு ரசமான விஷயங்களா? — என்று ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு, மேலும் மேலும் ஆவல் அதிகரித்தது; ஏனெனில், ‘கதாநாயகனை’ கடிகாரம், போலிசாரிடம் இருக்கிறது. மாஜிஸ்திரேட் மருதவாணரோ, மயக்கத்துடன் கிடக்கிறார், வீட்டில். கடிகாரத்தை எடுத்துக்கொண்டு வந்து அகப்பட்டுக்கொண்ட வரதனோ, சிறையில்! அவனது மனைவி என்று எல்லோராலும் கருதப்பட்டு, பைத்யத்தைக் கண்டதும் ‘தாலிப் பிச்சை’ கேட்ட வள்ளியோ, காராக்கிரகத்தில்!! நானோ, நாச்சியின் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன், இங்கே. இந்த சமயத்தில், கதையை நிறுத்தினால், எப்படியிருக்கும் மனம்? பைத்யத்தைப் பார்த்தேன்! களைப்பால், கண்களை மூடிக்கொண்டிருந்தான், அவன்! உள்ளே எழுந்துபோய், குழந்தைகளுக்காக வாங்கிவைக்கப்பட்டிருந்த ‘சாத்துக்குடி’ பழங்களை எடுத்துவந்து, உரித்து பைத்யத்தைத் தட்டி, அவனிடம் கொடுத்தேன். இரண்டு மூன்று சுளைகளைத் தின்ற அவன், என்னைக் கேட்டான்.

“இது, என்ன பழங்க!”

“சாத்துக்குடி......”

“கடைக்காரன் அப்படிச்சொல்லி விற்றிருக்கிறான்!”

“இல்லையே! நானே பொறுக்கியெடுத்தேன்......”

“தோல், தோற்றம்! — எல்லாம், சாத்துக்குடிபோலவே இருந்திருக்கிறது. அதனால், வாங்கிவந்துவிட்டீர்கள்......”

“ஆமாம், அப்படித்தான்!”

“ஆனால், இது உண்மையான சாத்துக்குடி பழம் அல்ல — இங்கேயோ,எங்கேயோ கிடைப்பதை வாங்கிவந்து, கடைக்காரன் விற்றிருக்கிறான். நீங்களும், வாங்கிவந்திருக்கிறீர்கள்.”

“பார்ப்பதற்கு அசல் சாத்துக்குடி போலவேயிருந்ததே......”

“ஊம்! இப்படித்தாங்க, இந்த உலகத்திலே பல விஷயத்திலே, நாம் ஏமாந்துவிடுகிறோம். இதே போலத்தான், நாச்சியும் ஏமாற இருந்தாள், அவர்களிடம்.”

“யாரிடம்?”

“காப்பாற்றி வண்டியில் வைத்துக்கொண்டு வந்தார்களே, அவர்களிடம்.”

“யார் அவர்கள் என்றே, இன்னும் சொல்லவில்லையே?”

“அவர்களா?” — என்று கேட்டுவிட்டு, பைத்யம் ஆரம்பித்தான், கதையை.

*

“சாத்துக்குடியா! போலியா!!— என்று தெரியவில்லை, உங்களுக்கு. பார்த்ததும், சாத்துக்குடிபோலிருந்ததால், வாங்கிவந்துவிட்டீர்கள். இதேபோல, உலகில், பார்வைக்கு நல்லதாகத் தென்படும் பல பொருள்களை, உரித்துப்பார்த்தால், புளிக்கும்! கசக்கும்! உலகத்திலேயே மிக அழகான பொருள்களான, மயிலையும், அல்லியையும் எடுத்துக்கொள்ளுங்கள். பார்க்கும்போது, எவ்வளவு அழகாயிருக்கிறது? கவிஞர்களுக்கு, அழகை வர்ணிக்க, மிகவும் பயன்பட்டவை; அவை! ஆனால், அந்த மயிலால், ஏதாவது பிரயோசனம் உண்டா? பார்வைக்கு மிகவும் கேவலமாகத் தென்படுகிறது. கழுதை! அடிக்கிறோம்; திட்டுகிறோம். ஆனால். மனிதனுக்கு அது எவ்வளவு பிரயோசனப்படுகிறது? அல்லிப்பூ, கண்ணுக்கு அழகு காண! ஆனால், சிறு பிரயோசனமாவது உண்டா? எருக்கம் பூ, கூட சில வேளைகளில், மருந்துக்கு ஆகிறது! இப்படித்தான், உலகில், பார்வைக்குப் பகட்டாகயிருக்கும் பலரிடம், நஞ்சு எண்ணமும், நாராசப் போக்கும் மலிந்திருக்கிறது. தண்டவாளத்துக்கு இரையானாளே தன் குழந்தையுடன் சுப்பி. அவளுக்கு உதாரணம் சொல்லவேண்டுமானால். எருக்கம் பூவைவிட, மிகக் கேவலமான இன்னொரு பூவைத்தான் தேடிப்பிடிக்க வேண்டும்! ஆனால், அவளோ, ஒரு ஏழை ஜீவனுக்காக. எவ்வளவு பச்சாதாபப்பட்டு, உயிர்வாழ மார்க்கம் செய்ய முனைந்தாள். நாச்சியின் அப்பா, அவளை, ‘சுப்பி’ என்று கூடக் கூப்பிட்டிருக்கமாட்டார், நல்ல நிலையிலிருந்தபோது. ‘கழுதை! என்னடீ, ஒய்யாரம்?.’ ‘கழுதை! ஏன், இவ்வளவு நாழி கழிச்சு, வேலைக்கு வர்ரே?.’ ‘கழுதை! உன்னை, உதைக்காவிட்டால் நீ உருப்படமாட்டே?,’ இப்படித்தான் அழைத்திருப்பார். ஆனால், அந்தக் கழுதை......?”

“அதுகிடக்கட்டும். கழுதை! நாச்சி, வழியில் போனோர் உதவியால், அழைத்துவரப்பட்டாள்...... பிறகு!”

“பிறகென்னங்க? கண்ணை இலேசாகத் திறந்து பார்த்தாள்! தான் ஒரு பெரிய வீட்டின் கட்டிலில்’

கிடப்பதையும், தனக்கு அருகில், ஒரு அழகான அம்மா உட்கார்ந் திருப்பதையும் கண்டாள். முப்பது வயதிருக்குமாம், அந்த அம்மாவுக்கு. அணிந்திருந்த நகைகளையும், பட்டுப் புடவையையும், பார்த்த நாச்சிக்கு, 'பெரிய பணக்காரி, ஒருத்தியின் ஆதரவி லிருக்கிறோம்,'' என்று எண்ணம். அப்போது, அங்கே ஒரு ஆணும் வந்தாராம்! கிட்டத்தட்ட அவருக்கு, அந்த அம்மாவைவிட, இரண்டு மூன்று வயது அதிகம் இருக்கலாமாம். அம்மணி, அவ்வளவு பெரிய பணக்காரிபோலத் தென்பட்டாரே ஒழிய, அவரோ, பார்க்க மிகவும் அருவருப்பாக இருந்தாராம்! அம்மணிக்கு நேர் மாறாக. மொட்டைத் தலை, ருத்ராட்சக்கொட்டை கழுத்தில், உடலில் காவித்துணி, நீற்றுப்பட்டை, முதலியவைகளோடு காட்சி அளித்தாராம், அவர்!—இதைக் கண்டதும், நாச்சிக்கு, ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதனால், திறந்த கண்களை மூடிக்கொண்டு, அவர்கள் நடவடிக்கைகளைக் கவனித்திருக்கிறாள். சேர்ந்து உட்காருவதும், சிரிப்பதும் பேசுவதும், கேலி பேசிக்கொள்வதும்; கிண்டல் பேச்சுகளில் ஈடுபடுவதுமாக இருந்த அவர்களது நடவடிக்கைகளைக் கண்ட அவளுக்கு, புதிர்மேல் புதிராயிற்று. அந்த இருவரும்தான், அவளைக் காப்பாற்றியவர்கள்! அவர்களோ, கணவனும் மனைவியும்போல இருக்கிறார்கள், வீட்டில்! உருவையும், ஒற்றுமையையும் பார்த்தாலோ, மனதில் குழப்பம் ஏற்படுகிறது. அதனால், கண்ணை விழிக்காமலே, அவர்கள் உரையாடலைக் கவனிக்க முயன்றாள், நாச்சி!'' என்றுசொன்ன பைத்யம், நாச்சி சொல்லியதைக் கூறத்துவங்கினான்.

*

''அழகான பெண்''—என்கிறாள், அவள்.

''பறந்துவிடாமல் பார்த்துக் கொள்''—என்கிறார், சாமியார்.

''பக்குவம் அறியாதவளா, நான்?''—என்கிறாள், அவள்.

''பட்சி—எப்படிப்பட்டதோ?''

''ஏதாயிருந்தால் என்ன — நம் வலைக்குள் வீழ்ந்துவிட்டது!''

## திருமணம்

2—2—55-ல் தோழர் அ. சு. கந்தசாமிக்கும் தோழியர் செயம் மாளுக்கும் திருந்திய திருமணம் சலகண்டாபுரம் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது.

''அவசரப்படாதே!''

''நீங்கள் அடியக்கமங்கலத்துக்குப் போய்வாருங்கள்......''

''அவன் வருகிறானே! என்னவோ!''

''விஷயத்தைச் சொல்லுங்கள், ஓடி வருவான்''

இப்படிப் பேசிக்கொண்டதைக் கேட்டேன்—அவர்கள் யாரென்று புரிந்துவிட்டது. விசித்திரமான சிக்கலில் சிக்கிக்கொண்டிருப்பதும் விளங்கியது. நான் அழைத்துச் செல்லப்பட்ட ஊரின் பெயரும் சிக்கல்தான்—நிவாரூருக்குச் சமீபம்.

பார்வைக்குப் பணக்காரிபோலக் காட்சியளித்த அவள் — சதையை விற்றுச் சதையை வளர்க்கும் தாசி.

சாமியார் உருவில் காட்சியளித்த அவன், அவளுக்கு ஒரு அம்பு!

அவளது ஆடம்பரவேடம், வியாபாரத்துக்கான விளம்பரம்.

அவனுக்கு, சாமியார் வேடம், போகும் தொழிலுக்கு ஒரு போர்வை.

இப்படிப்பட்டவர்கள் கையிலே சிக்கிக்கொண்டோமே என்றெண்ணியபோது, என் மனது வேகமாக அடித்துக்கொண்டது. இவர்களைப் போய் நல்லவர்கள் என்று நம்பினேனே.

எப்படி இங்கிருந்து தப்புவது?—மெதுவாக எழுந்து கதவைத் திறக்கச் சென்றேன். கதவு சாத்தப்பட்டிருந்தது — 'பறவை பறந்துவிடாமல் பார்த்துக்கொள்' என்று அந்தச் சாமியார் கூறியது, நினைவுக்கு வந்தது.

சரி, ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம்—என்று எண்ணினேன்.

இதுவா, என் தலையெழுத்து?

இரவு வந்ததும்...!

எண்ணும்போது, இடிகள் விழுவதுபோலிருந்தது, தலையில்.

சாய்ந்தேன், படுக்கையில். தலையணையெல்லாம் தண்ணீர். அழுது கொண்டே அங்கே எவ்வளவு நேரம் கிடந்தேனோ, எனக்குத் தெரியாது.

கதவு திறக்கும் சப்தம் கேட்டது. என்னைக் காப்பாற்றியவள் வந்தாள். நான் மயக்கம் தீர்ந்து கிடப்பதைக் கண்டதும், அவள் முகம் மலர்ந்தது. அருகில் உட்கார்ந்தாள்; கண்களைத் துடைத்தாள்; 'கண்மணி' என்றாள்; 'இங்கேயே தங்கிவிடு' — எனக்கு யாரும் இல்லை' என்று ஏதேதோ சொன்னாள். கடைசியில், 'எழுந்து முகத்தைக் கழுவிக்கொள் அம்மா' என்றாள். பேசாமல் யோசனையில் ஆழ்ந்திருந்த எனக்கு, திடீரென மனதில் ஒரு எண்ணம் உதித்தது எழுந்தேன்; குளிக்கவேண்டும் என்றேன். குதூகலமாயிற்று, அவள் முகம். அழைத்துக்கொண்டு போனாள் — அலங்காரமான உடைகளைக் கொடுத்தாள்—அணிந்து கொண்டேன் — அறைக்குள் சென்று உட்கார்ந்துகொண்டேன். ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே —ஜெயமணியின் போலிவேடத்தை உலகுக்கு உணர்த்தும் 'கடிகாரம்' மட்டும் பத்திரமாக என்னிடமே தான் இருந்தது.

இரவு வந்தது. கதவிடுக்கு வழியாகப் பார்த்தேன்—அவள் எதிர் பார்த்தபடி, சாமியார், ஒரு கிழவருடன் வந்து சேர்ந்தார். அந்தக் கிழவரைக் கண்டதும், அவள் காட்டிய மரியாதை, ஓடிஓடி ஒவ்வொன்றையும் கொண்டுவைத்த காட்சியையும் கண்டபோது, 'பணம் என்ன பாடுபடுத்துகிறது' என்று எண்ணினேன். கிழவரை, வரவேற்கவேண்டியவளல்லவா நான்? எழுந்து கண்ணாடிக்கருகில் போனேன். அவள் போட்ட நகைகளும், செய்த அலங்காரங்களும், என்னைப் புதுமணப் பெண் போலவே காட்டிற்று. இந்தக் கோலத்தில், என்னைக் காண எவ்வளவோ ஆசைகளைத் தேக்கி வைத்திருந்தவர், என் அப்பா. ஆனால், நான், யாருக்கும் தெரியாமல் ஜோடனைகள் செய்யப்பட்டு, கிழவர் ஒருவரின் ஆசைக்கு விலை போக நிற்கிறேன். அந்த நிலையில் என்னுடைய உருவத்தைக் கண்ணாடியில் பார்த்தபோது, ஏனிப்படி நாம் கஷ்டப்படவேண்டும்—என்னைவிட மோசமான இந்தத் தாசி, எவ்வளவோ செல்வத்தில் வாழும் போது, நாமும் அந்த வழியில் சென்றால் என்ன—என்றுகூட ஓர் எண்ணம் எண்டாயிற்று. மீண்டும் கதவிடுக்கு வழியாகப் பார்த்தேன். கிழவர் தெரிந்தார்—அவரைப் பார்க்கும்போது, பெரிய பணக்காரராயிருக்கவேண்டும் என்பது நன்கு தெரிந்தது. அந்தக் கிழவரை......! 'சரி' என்று முடிவு செய்துசெய்துகொண்டேன். இன்னும் சிறிது நேரத்தில் அவர் வருவார், என்னைத் தொடுவார்; பிறகு

……பிறகு…… குழப்பமயமானேன், நான். புதுஒளி பூக்கும் மனதில். உடனே அது மறைந்து இருள் பரவும் இதயத்தில். இப்படியே திண்டாடிக்கொண்டிருந்தேன். நேரமும் வந்தது. கிழவர் சாமியாருடன் என் அறைக்குள் நுழைந்தார். நானோ கண்களை மூடிக்கொண்டு கட்டிலில் கிடந்தேன். கிழவர் அருகில் வருவது தெரிந்தது. நெருங்கிவிட்டார்…ஆ!…ஒரு அதிர்ச்சி… திடுக்கிட்டு எழுந்து, ஒரு மூலைக்கு ஓடினேன். என்னைத் தொட்ட அந்தக் கிழவர், 'வாம்மா! உட்கார்' என்று சிரித்தபடியே சொன்னார். வெறிபிடித்தவராயிருந்தால், ஓடிய என்னை நோக்கித் தாவியல்லவா வந்திருக்கவேண்டும்? இவரோ, அமைதியோடல்லவா என்னை அழைக்கிறார்! என்ன காரணம்? கிழவர் அவர்! எப்படி ஓடவும் தாவவும் முடியும்? அதனால்போலும் என்று எண்ணியபடியே நின்றேன்.

'இந்தத் தளுக்குமினுக்கெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரியும். பெண்ணே! அப்படியே, இரு…..,' என்று சொல்லிக்கொண்டே, கட்டிலில் சாய்ந்து படுத்தார். அப்போது, நான் கனவிலும் நினைக்காததுபோல இருந்தது அந்தக் காட்சி! வெளுத்து நுரைபோலிருந்த அவரது தலைமுடி, கீழே விழுந்தது……என்ன ஆச்சரியம்! ……நல்ல தலை, அழகான கிராப்…. அவர் கிழவர் அல்ல……அப்படியென்றால்!! கிழவர் வேடத்துடன் இங்கே, ஏன் வரவேண்டும்? இதென்ன புதுமை! இனி என்ன நேருமோ?—என்று கலங்கிப்போய் விட்டேன்! படுக்கையில் சாய்ந்த அவரோ, தன் வேஷம் கலைந்ததை எண்ணி, விடுவிடென்று கீழே விழுந்த தலைமுடியை எடுத்து, பொருத்திக்கொண்டார்! தலைமுடியைப் போலத்தானிருக்குமோ, அந்த மீசையும்? நிச்சயம் அப்படித்தானிருக்கவேண்டும்! தாசி வீடுகளுக்குச் செல்லும் பலர், வெளிக்குத் தெரிந்தால் தங்கள் 'தராதரம்' கெட்டுவிடுமென்று தலையில் முக்காடு போட்டுக்கொண்டோ, சந்து பொந்துகளில் பதுங்கியோ, செல்வார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த 'ரகம்' போலும் இந்த ஆள், என்று எண்ணியபடியே அசையாது நின்றேன்! அவரோ, என் பக்கமும் திரும்பாமல் 'சிகிரெட்' ஒன்றை எடுத்து, கொளுத்திப்பிடித்த வண்ணம், தன்னுடைய கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டார்! அவர் தன் கடிகாரத்தைப் பார்க்கும்போது, என்னிடமிருந்த கடிகாரத்தின் ஞாபகம் எனக்கு வரவே, நானும் தொட்டுப்பார்த்தேன். அப்போது, வெளியே யாரோ பலர் வருவது போன்ற காலடிச் சப்தம் கேட்டது! வீட்டுக்குரிய தாசியும், சாமியாரும் 'ஐயோ! ஐயோ!!' என்று அலறும் சப்தமும் கேட்டது! ஒன்றும் புரியாமல், விழித்தேன் — படுக்கையில் படுத்திருந்த 'வாலிபக் கிழவர்,' என்னைப் பார்த்துச் சிரித்தார்.

"எத்தனை நாளைக்கு என்னை ஏமாற்றமுடியும்? ஊம்…… அகப்பட்டுக்கொண்டாயா? பார், இன்னும் சிறிது நேரத்தில்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார். "நான் ஏமாற்றினேனா? யாரை நான் ஏமாற்றினேன். ஐயா, எனக்கொன்றும் தெரியாது. என்ன சொல்லுகிறீர்கள்" என்று அலறினேன். அவரோ "தெரியுமடி கள்ளி! எனக்கு, உங்கள் செய்கைஎல்லாம் நன்றாகத் தெரியும்………ஊம்…… கிளம்பு" என்றார்.

"எங்கே?—என்றேன்.

"எங்கா?….இரு, சொல்கிறேன்" … என்று சிரித்தார். அவர் அவர் சிரிப்பு சித்ரவதை செய்வது போலிருந்தது, எனக்கு. அப்படிச் சிரித்தார். கதவைத் திறந்தார். அங்கே…ஆ! இவர்கள் எப்படி வந்தார்கள், இங்கே?—என்று நான் திகைத்தேன். எதுவும் புரியாமல் விழித்தபடியே நின்றேன்.

'வா வெளியே' என்று அதட்டினார், அந்த வாலிபக் கிழவர்.

புறப்படத் தயாரானேன்.

(வளரும்)

# "குயிலும் முரசு கொட்டும்!"

காவியம் இருக்கலாம், ஓவியம் இருக்கலாம், உன்னத அறிஞர்கள் முளைக்கலாம், ஒப்பற்ற விஞ்ஞானிகள் விளையலாம்-இத்தனையுமிருந்து அந்த மண்ணில், மனிதனை மதிக்கும் பண்பில்லாவிடின் என்ன பயன்? தீபம் தரும் விளக்கு இருந்தும், திரியில்லாவிடில், வெளிச்சம் உண்டோ! அப்படிப்பட்டதல்லவாம், நமது அழகு அகம். சிறந்த மனிதப் பண்பினை உடையதாம்! மனித உயிர்களுக்கு இன்னா செய்யாது, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமெனும், உன்னத எண்ணம், நமது உயிரோடு பிறந்ததாம்!! யாராயினுஞ்சரி, அவர்கட்கு வேண்டிய, ஆதரவும் அன்பும் காட்டி, இயன்றதைச் செய்து அவரின்பம்கண்டுமகிழும், பெருந்தன்மை கொண்டவனும், தென்னாட்டு மகன்! அவனுடைய பூமியிலே, உயர்ந்து விளங்கும் கோபுரங்கள் மட்டுமல்ல; அவைகளோடு போட்டியிடுமளவுக்கு மனவளமும் இருக்கிறதாம். இந்த மனவளம், இன்று நேற்றல்ல, தொன்று தொட்டு இருக்கிறதாம்!

சுடர்விசித்திகழ்ந்தரோமாபுரியும், கிரேக்கமும் ஒரு காலத்தில், தென்னகத்தைவிடச் சிறப்பான வகையிலிருந்ததுண்டு— அவையெல்லாம், காலப் புழுதியில், மறைந்துவிட்டன. இடிந்த கட்டிடங்களையும், மடிந்துபோன 'சாக்ரடீசு'களையும் காட்டியே, அவைகளின் அற்றை நாள் மாட்சியை எடுத்துரைக்க முடிகிறது. உலகம் வியக்கும் 'பிரமிட்' உண்டு, எகிப்தில்! ஆனால், அந்த நாடுகளிடத்தும் காணப்படாத, மனவளம் இங்கேதான் இருக்கிறதாம்! அழியாத கலைகள், சாயாத நாகரீகம், இத்தனைக்கும் மேலாக தன்னிகரில்லாத் மனிதப் பண்பு—இவை யாவும், இருக்கிறதாம், நம்மிடம். மனவளம்மட்டும் இருந்துவிட்டால் போதுமா? நாடு செழிக்க மார்க்கம் உண்டாகிவிடுமா? அல்ல, பாருங்கள்! அதனால், அந்த மனவளம் மட்டுமின்றி, மூளைபலமும் அதிகமாம். எந்தத் துறையாயிருந்தாலும், அதில் ஈடுபட்டால், சிறந்தவன் எனப் பெயரெடுக்கும் சீரிய பண்பு உண்டாம். தொட்டது, பொன்னாகுமாம்! எடுத்ததில் வெற்றிகாண்பானாம்! இயற்கையின் சக்திகள், எது கிடைத்தாலும், அதில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்தால், எல்லோரும் புகழும் விதத்தில், வாகைசூடி வருபவன்,

தெற்குத் தேசத்தானும்!—தெரிவிக்கிறார், அவர்.

அவர், தென்னாட்டுக்குச் சொந்தமானவரல்ல; வெளியிடத்தார். அதனால், நம்மைவிட, அதிகமாக நம்மைப்பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார்.

எதுவும் இல்லை !

தென்னாட்டார் தெரிந்துகொள்ளவேண்டியது, எதுவும் இல்லை!!

என்று சிறப்புச் சிந்து, பாடுகிறார்! அப்படியென்றால், அகில உலக அறிவிலும் ஆராய்ச்சியிலும் நாம் வானமுகட்டை எட்டிவிட்டோம் என்றல்ல;அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது எதுவும், கிடையாதாம் நமக்கு.

தம்மோடு, ஒப்பிட்டுப் பேசுகிறார், அவர்.

அவர், ஒரு வடநாட்டுக்காரர்; அவர்தான், இவ்வண்ணம் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

இஞ்சினியர்கள் வேண்டுமா?—ஏராளம் உண்டு தெற்கே!

கல்வி நிபுணர்கள் தேவையா?—காண்கிறேன், இங்கே!

விஞ்ஞானிகள் வேண்டுமா?—தெற்குதான் அதற்குத் தேசம்!

இந்தியாவில் பரவிக்கிடக்கும் பத்திரிகையாளர்கள் எங்கிருந்து போனவர்கள் தெரியுமா?—இங்கிருந்துதான்!

என்று விளக்கமாகத் தெரிவிக்கிறார். எந்தத் தொழிலானாலும், எந்தத் துறையாயிருந்தாலும், அதிலெல்லாம் சிறந்து விளங்கும் சிரிய மணிகளைக் காணலாமாம் தெற்கே.

சிந்தனைச் சிற்பிகள், உண்டாம் இங்கே! செல்லும் பாதை எதுவானாலும் அதிலே தீபச் சுடரென விளங்கும், மனவளம் நிரம்பிய பூமியாம், தெற்கு. அந்த மனவளத்தை, அடாத செயல்களிலும், கூடாத வேலைகளிலும் செலுத்தலாமல்லவா? அப்படிப்பட்டவர்களல்லவாம், நாம்! மனவளம் நிரம்பி வழிகிற அளவுக்கு மனிதப் பண்பும் ததும்புகிறதாம், நமது உள்ளங்களில். இன்முகமும், வந்தாரை உபசரிக்கும் மனோபாவமும், நமது மாறுத சொத்தாம்.

ஒரு நாட்டுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?—அதனால் தான், உங்களிடம் எல்லாம் இருக்கிறது! தருவதற்கென்று, வடநாட்டாரிடம் எதுவும் கிடையாது! எனத் தெரிவிக்கிறார், அவர்.

மனவளம் — மனிதப் பண்பு — புராதனப் புகழ்—இத்தனையுமிருந்துவிட்டால் போதுமா? வளரும் உலகின் புதுமைகளை ஏற்காமல், அவைகளைப்பற்றி அறியாமல், 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன், பராபரமே,' என்றிருந்துவிட்டால், போதுமா? எண்ணெய் ஊற்றாத விளக்காகத்தானே நேரும்! அந்த நிலைபெற்றதல்லவாம், நமது பூமி. வளரும் புதுமைகளை மனதில் ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் நிரம்பியதாம்.

கூறுகிறார், அவர்! கும்பமேளாக்களையும், கோட்சே கோஷ்டிகளையும், இந்துமத வெறியர்களையும், ஏராளமாகக் காணும் வட நாட்டிலிருந்தவரல்லவா? அதனால், அது எதுவுமின்றிக்கிடக்கும், தென்னாட்டைக் கண்டதும் விழிகளில் வியப்பும், மொழிகளில் ஆனந்தமும் கூத்தாடுகிறது! அதனால், ஆனந்தச் சிந்து பாடுகிறார்! "அன்பர்களே — தென்னாட்டாரே — எது இல்லை உங்களிடம் நாங்கள் கொடுக்க! எந்தத்துறையானாலும் சிறப்புற்று விளங்கும் திறமை இருக்கிறது — எல்லோரையும் போற்றி வாழும் மனப்பண்பும் இருக்கிறது—அதோடு, எதுவானாலும் விதைத்து வளர்க்கக்கூடிய மன வளமும் இருக்கிறது—புராதனப் பெருமைகளைப் புரட்டினாலோ உங்களுக்கு ஈடு யாரும் இல்லை. இப்படிப்பட்ட உங்களிடமிருந்து வடநாட்டுக் காரராகிய நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டியது ஏராளமே ஒழிய, சொல்லிக் கொடுக்க எங்களிடம் என்ன இருக்கிறது?" என்று வெளிப்படையாகவே தெரிவிக்கிறார்.

தெரிவிப்பவர், உங்களைப்போல நம்மைப்போல, அடுத்த வேளைக்கு என்ன செய்வது, மாதச் சம்பளம் போதவில்லையே எனும் நிலைபெற்றவரல்ல — சுகவாசி! அதுமட்டுமின்றி, சிந்திக்கவும், திட்டங்கள் தீட்டவும் அவசியமில்லாத உல்லாசமானதொரு பதவியிலே உட்கார்ந்திருப்பவர்!! கவர்னர் பிரகாசா—அவர்தான் இவ்வண்ணம் சிறப்புச் சிந்து பாடுகிறார்.

*

குயிலின் குரலினை, இனிமைக்கும் இன்பத்துக்கும் எடுத்துக்காட்டெனச் சொல்வர்—ஆனால் அதன் குரலிலும் 'கொட்டு முழக்கு' எனும் உத்வேகம் ஒலிக்க வேண்டுமாம்! கூப்பிட்டுச் சொல்கிறார், இளைஞர் நரம்புகளில் இதய நாதத்தைக் கிளப்பும், எழுச்சி மிக்க வார்த்தைகளில்!

குயிலே, கூவாய்!—என்று, கூப்பிட்டுச் சொல்கிறார்.

அது கூவவேண்டுமாம்! அந்தக் குரலிலே, முரசு முழக்கம் கேட்க வேண்டுமாம்!!

எதற்குத் தெரியுமா? இதற்கானப் பதிலை அவர் கூறியதால் தான், நமது கவிஞர் ஆனார்! புரட்சிக்கவி என்னும் பொன்னுடை பெற்றார்!

குயிலே கூவு! கோபாலனைக் கூப்பிடு! அவனது வேணுகானத்தையும் மீறிச்செல்லட்டும் உன்குரல்—அப்போதாவது அந்த மாயக் கண்ணன் வருகிறானா—என்று பார்ப்போம்! குயிலே, கூவாய்!—என்று, திட்டிய கவிஞர்கள், ஏராளம்.

ஆனால் நமது கவிஞர், குயிலை அதற்கு அழைக்கவில்லை!

குயிலை, அழைக்கிறார்—சிறை நீங்க குயிலே கூவு!—என்று கூப்பிட்டுச் சொல்கிறார்.

அந்தக் கூவுதலில், முரசின் முழக்கம் வேண்டுமாம்!

சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திறவிழி!—என்று ஆவேசத்துடன் பாடிய அதே கவிஞர்தான், குயிலையும் கூப்பிட்டுச் சொல்லுகிறார்—குயிலே! கொட்டு முரசு!—என்று.

"திராவிடநாடு சிறை நீங்க—என்று,
குரலே முரசாகக் கூவுவாய், கருங்
குயிலே!"

விடுதலைத் தாகத்தின்மீதுள்ள வேட்கைச் சின்னம் இது. புல்லே, வாளாகு! கூனிய முதுகே-நிமிர்ந்து

## வருந்துகிறோம்

'தென்றல்' ஆசிரியரும், நமது கழகத் தோழருமான கண்ணதாசன் அவர்களின் தந்தையார் திரு. சாத்தப்பா அவர்கள், கடந்த 4ந் தேதியன்று, சிறுகூடல்பட்டியிலுள்ள தமது இல்லத்தில் காலமான செய்தி அறிய மிகவும் வருந்துகிறோம். தந்தையாரின் பிரிவால் வருந்தும் தோழருக்கும், அவருடையஅண்ணனும் மதராஸ் பிக்சர்ஸ் உரிமையாளருமான தோழர் ஏ. எல். சீனிவாசன் அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும், நமது மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## மதுரையில் நமது ஏஜண்ட்

தோழர் எஸ். என். பிச்சை அவர்களை, திராவிடநாடு விற்பனையாளராக நியமித்துள்ளோம். எஸ். என். பிச்சை, 14, வடுக தட்டார சந்து, கீழமாசி வீதி, மதுரை என்ற விலாசத்தில் பிரதிகள் கிடைக்கும்.

பொறுப்பாளர்.

பார்! குருடனே—புறப்படு, பயப்படாமல்!!—இப்படியொரு கவிதையும், அதை இதயத்தில் ஏந்தி புறப்படும் மறவர் கூட்டமும், தென்னாட்டில், சில பல ஆண்டுகளாக, எல்லோரும் கண்டு வரும் காட்சியாகும்.

இந்தக் காட்சியின் அருமை பெருமைகளை, அறியாத நிலையிலிருந்தோர் பலர்—அறிந்தும், ஏளனம் செய்தோர், ஏராளம்.

அவர்களது பார்வையை, கவர்னர் பிரகாசாவின் வார்த்தைகளின் பக்கம், திருப்பிவிட விரும்புகிறோம்.

தென்னாடு குறித்து சிறப்புச் சிந்து பாடிய அவர், சென்னை மாநிலத்தின் ஆட்சித் தலைவராக அமர்ந்திருக்கும் அவர், நாட்டின் நாடியை அறியும் வாய்ப்புகளை அதிகம் பெற்ற அவர். 'கவிஞர் குயிலும் கொட்டவேண்டும் முரசு!' என்றாரே அந்த மனவேகத்தின் அளவையும், விளைவையும் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறார்.

நாம் மறந்துவிடவில்லை, இரண்டாண்டுகளுக்குமுன் இதே கவர்னர் தஞ்சை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்தபோது நேரில் கண்டு, நிலைமைகளை அறிந்து, 'அடடா! இந்தக் கட்சிக்கு இவ்வளவு செல்வாக்கென்று எண்ணவில்லையே, நான்!' என்று ஆச்சரியப்பட்டதை. அவர்தான், இன்று, தனது ஆச்சரியக் குறிகளையடக்கிக்கொண்டு, அச்சியேந்திராதிபதிகளின் மத்தியிலே, மிகவும் அமைதியான முறையில் எடுத்துச்சொல்லியிருக்கிறார், "வடநாட்டிலிருந்து பிரிந்து தனியாக வாழவேண்டும் என்கிற பலமான இயக்கம் ஒன்றும் இங்கே உள்ளது," என்பதாக, பலமான இயக்கம்!—கூறுவது கவர்னர்.

தனியாகப் பிரிந்து வாழவேண்டுமெனும் பலமான இயக்கம் — இருக்கிறது, இங்கே! இதை வடநாட்டிலிருந்து வந்திருக்கும் அச்சகப் பிரதிநிதிகளே, நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அறிவித்திருக்கிறார், அவர்!

தெரிந்துகொள்வதோடு இராது, அந்த இயக்கத்தார் கூறுவது பற்றியும், தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

**"புகழ்பெற்ற பூமி, இது! ஆனால், சரிதப் புத்தகங்களை எடுத்துப்பார்த்தால், வடநாட்டைப் பற்றிய விபரங்கள் அதிகம் தென்படுகிறதேயொழிய, தென்னாட்டின் விஷயங்கள் அதிகமாக இல்லை"**

என்றும், குறிப்பிட்டிருக்கிறார்.

தென்னாட்டின் விஷயங்கள், அதிகமாக என்ன—கொஞ்சங்கூட, எங்கே உளது!

அகில உலக நாடுகளிலே, இலக்கியம் என்கிற பெயரால் ராமாயணமும், பாரதமும், சாகுந்தலமும், அர்த்த சாஸ்திரமும் மொழிபெயர்க்கப்படுகிறது—ஆனால், அவைகளைவிட அழகும் கவிதா நயமும் உள்ள தென்னாட்டுச் சிலம்புச் செல்வமும், சேர சோழ பாண்டியர்களின் அவையிலே கிடந்த அரும்பனுவல்கள் பலவும், உலக மறையெனப் போற்றப்படும் உத்தமக் குறளும், எவருடைய சிந்தனையிலாவது பட்டதுண்டா? சில தினங்களுக்குமுன், "ரஷ்ய" செய்தி இலாகா, இந்தியாவிலிருக்கும் முற்போக்கு எழுத்தாளர்களைப் பற்றி ஒரு விபரம் தந்திருந்தது—அதில், முல்க்ராஜ் ஆனந்த் அகமது அப்பாஸ், அரீந்திரநாத சட்டோபாத்யாயா முதலிய வடநாட்டு பேனா மன்னர்கள் மட்டும் தென்பட்டனரேயொழிய, புதுமை இலக்கியத்துக்கு புதிய நடைபோடும் தென்னாட்டு எழுத்தாளர்கள் சிலரைப்பற்றிய குறிப்பாவது உண்டா! கிடையாது-தீண்டப்படாதவர்கள் தென்னாட்டார் என்றே, மறைக்கப்பட்டு வருகின்றனர். டில்லி, ஒரு இலாகா வைத்திருக்கிறது— புதைபொருள் ஆராய்ச்சிக்காக! அந்த இலாகாவின் உதவியை நாடினார் அன்பர் மணவாளராமானுஜம் — அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயிருந்தபோது. கிரேக்கரும் ரோமரும் தத்தமது நாவாய்களுடன் காத்திருந்ததாகச் சொல்லப்படும் பூம்புகார் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டும், கடலுக்குள் புதைபட்ட தமிழகத்துத் தலைநகரின் சின்னங்கள், சில சமயங்களில் தென்படுகின்றன—கரை அருகில். போதிய வசதிகளைத் தந்தால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், அந்த ஆராய்ச்சியைச் செய்கிறோம் என்று எழுதினார்! அடிக்கடி எழுதிக் கேட்டார்! சம்மதிக்கவில்லை, டில்லி. ஆனால், பலகோடி ரூபாயிலே. கிழக்குப் பஞ்சாபில் ஒரு புதிய தலைநகரம் கட்டிக்கொடுத்திருக்கிறது. புதைபட்ட, நகரம் இங்கே — ஏட்டில்! அங்கே, புதியதோர் நகரம் உருவாகிறது! — இதைத்தான், கவர்னர் பிரகாசா, எடுத்துக் காட்டுகிறார். தென்னாட்டு சரிதம், இருளடைந்திருக்கிறது, என்பதாக!

அந்த இருளடைந்த பகுதியைத் துலக்கினால், என்னென்னவோ கிடைக்கும். மனவளம்—குணநலம்—செயல்வன்மை—புதுமை விரும்பும் போக்கு—இத்தனையும் பொலிவதாகக் கூறி, இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள், உயர்ந்து கிடக்கும் கூடகோபுரங்கள் ஆகியவைகளைக் காட்டி, 'தென்னாடு சிறப்புறு நாடு' என்று பாடுகிறாரே சிந்து, அதன் உண்மையையும். உயர்ந்தோர் வீழ்ந்ததன் வகையையும் அறியக்கூடும். அனுமதிப்பார்களா ஆதிக்கக்காரர்கள்? தருவார்களா உதவியும் சம்மதமும்!

**இப்படியொரு நிலைமையை, வடவர் வளர்ப்பதால்தான், வடக்கைவிட்டு தெற்கே வந்த பிரகாசா, பிரிவினை இயக்கம் தழைத்தோங்குகிறது என்று மனதார உணருகிறார்.**

**அப்படி உணர்வதால், வடநாட்டாருக்கு செய்துவரப்படும் தவறுகளை எடுத்துச் சொல்லுகிறார்.**

**பலமான இயக்கம் ஒன்று இருக்கிறது—அலட்சியமாக எண்ணாதீர் — என்று அறிவுறுத்துகிறார்.**

*

ஒரு நாட்டின் பெருமையை, அதனுடைய மொத்தப் பரப்பு, அங்கே வாழும் மக்களின் தொகை இரண்டையும் வைத்து மதிப்பிட்ட காலம் மறைந்துவிட்டது.

இப்போது, அந்த நாட்டின் மடியில் என்னென்ன தொழில்கள் உள்ளன, வாழும் மக்கள் இன்பமாக வாழ்கின்றனரா—துன்பம்

(10-பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 13—2—55 [ஞாயிறு

# கரையான் புற்றெடுக்க!

"இந்த ஊரிலேயே, ரொம்பப் பெரிய மனுஷருங்க, அவர்!"

"எந்த விதத்தில் அப்பா— அவரை பெரிய மனிதர் என்கிருய்?"

"இதென்னங்க, இப்படிக் கேட்கிறீங்க! ஊரிலேயே, அவருதான், பெரிய பணக்காரரு......"

"பணம் வைத்திருப்பதால், அவரை பெரிய மனிதர் என்று சொல்கிருயோ?"

"அதுமட்டும் இல்லீங்க! அவர் தான், இந்த ஊருக்கே, சேர்மன்...,"

"பொதுக் காரியங்கள் எதிலாவது, அவர் ஈடுபட்டிருக்கிருரோ!"

"ஓ! டவுன் காங்கிரஸ் கமிட்டியே அவர் வீட்டிலே தான், கூடுறது..."

"காங்கிரஸ் போராட்டத்தின் போது ஜெயிலுக்குப் போனவரா?"

"அவரு ஏங்க போகணும்! காங்கிரசுக்கு அவர் ஆதரவு கொடுக்க முன்வந்ததே, பத்துதடவை ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தது மாதிரி தானுங்களே......"

"வேறு, எந்தவித, பொதுஸ்தாபனங்களிலும அவருக்கு தொடர்பு கிடையாதோ?"

"உண்டுங்க!"

"என்ன?"

"மிருக பராமரிப்பு சங்கத்துக்கு அவர்தான் தலைவர், தேசியத்திட்டக் கமிட்டியிலே மெம்பர், டவுன் பாங்கியிலே டைரக்டர் இன்னும்... கோவாப்பரேடிவ் சொசைடிக்கு தலைவர்......"

*

ஊரிலுள்ள 'பெரிய மனிதர்' களைப்பற்றி விசாரித்தால், இப்படிப் பல், விபரங்கள் கிடைக்கும், பணம்! சேர்மன் பதவி! டவுன் பாங்கி டைரக்டர்! கூட்டுறவு சங்கத் தலைவர்!—இவைகளைக் காட்டி, அவர்களுடைய பெரிய மனுஷத் தன்மையை, எடைபோட முயல்வார்கள். பல ஊர்களில் —ஏன், எல்லா ஊர்களிலும்தான்! இப்பேற்பட்ட 'பெரிய மனுஷர்'களின் பெயரால், மணிக் கூண்டுகளும், பூஞ்சோலைகளும், திருவுருவப்படங்களும், சிலைகளும், அமைக்கப்பட்டு திறப்பு விழாக்களும், கோலாகலமாக நடத்தப்படுவதுண்டு. சராசரி, நாடெங்கும் நடைபெறுகிறது!

வதைத்து வட்டி வாங்கியவனுனாலும், விவசாயியை வாட்டி வருமானத்தை அதிகப் படுத்திக் கொண்டவனுனாலும், தொழிலாளர்கள் வயிற்றிலடித்து லாபத்தைக் குவித்த கொடுங்கோலனுயிருந்தாலும், அவைகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை— அமைச்சர்கள், அரசியல் யூகிகள், ராஜ்யாதிகாரிகள் அனைவரும் சென்று, அவர்தரும் விருந்துண்டு, திறப்புவிழாக்களைச் செய்துவிட்டுத் திரும்புவர். நாட்டில் நடைபெறும் சராசரிச் சம்பவங்கள், இவை! கூட்டுறவு சங்கக் கட்டிடத்திலும், நகரசபை மண்டபங்களிலும், இத்தகைய பெரிய மனிதர்களின் படத்திறப்பு விழாக்கள் நடைபெறும்போது போய்ப் பார்த்தால், பிரசங்கிகளுக்கு, பேசவே வராது! எதைப்பற்றிப் பேசுவது? சுற்றிச் சுற்றி, இவர் பெரிய பணக்காரர் — இவர் அப்பா இவ்வளவு பெரிய பணக்காரர்—பெரிய வள்ளல் —உடல் நலத்தையும் பொருட்படுத்தாது ஊராருக்காக கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றியவர் என்கிற ஒரே பல்லவியைத்தான், திருப்பித் திருப்பிச் சொல்ல முடியும். என்ருலும், பணம் இருக்கிறதல்லவா, பணம்! அந்த மோகனமான மூன்று எழுத்துக்கு, எது நிகர்? அதனால், விழாக்களையும், விருதுகளையும் பெற்றுவிட முடிகிறது, சுலபமாக! இத்தகைய 'பெரிய மனிதர்'களின் உண்மைக் கதைகளைக் கண்டு பிடிக்க, இருட்டு நேரம், எடுபிடிகள், கட்டிலறை, கணக்குநோட்டு இவைகளைப் பேசவைத்தால் ஆச்சரியப் படக்கூடிய பல உண்மைகளைப் பெறலாம்! அவைகள், எங்கே பேசுகின்றன!

*

"கிராமத்துக்கே பெரிய மனுஷருங்க அந்த சாமி. நல்லது கெட்டது எதானுலும் அவரைக் கேட்காமல் நாங்க செய்யறதில்லீங்க. என்ன இருந்தாலும் உயர்ந்த குலம் இல்லிங்களா! வாக்கு, பிரம்ம வாக்காச்சே"

குருக்கள் குப்புசாமி அய்யர், கிராமத்துக்கே பெரிய மனுஷர்— கந்தசாமி மூப்பஞர், கருத்துப்படி. காரணம், குருக்கள், பிரம்ம குலம். வயலில் விதை தெளிப்பதுமுதல், 'வாயிதா' கட்டுவதுவரை, குருக்களின் சம்மதம் கேளாது, செய்வதில்லை, அவர். ஏனென்ருல், அவர் வாக்கு பலிக்குமென்பது அவர் எண்ணம். பலித்தாலும் பலிக்காவிட்டாலும், மேல் சாதிக்காரர் அவர், அவர் மனதுக்கு மாருக நடக்கிறது பாபம் என்பது அவர் பரம்பரை பரம்பரையாகக் கற்றுக்கொண்டிருக்கிற பாடம்.

அதனுல், 'பெரியவங்க மனங்கோணுமல்' நடக்கிருர், கந்தசாமி. இங்கே, குப்புசாமி அய்யரை பெரிய மனிதனுக்குவது பணமல்ல, உயர்சாதி.

*

"ஊருக்கு, அவர்தாங்க பெரிய மனுஷரு..."

"எப்படி?"

"கிராமத்துக்குப் பட்டாமணியார் அவருதானே — ஊரிலே நடக்கிற நல்லது பொல்லாததுக்கு அவர் தானே பொறுப்பு"

"அப்படியா?"

அதுமட்டுமில்லீங்க, சப்இன்ஸ்பெக்டர், போலீஸ், ரிவினியு இன்ஸ்பெக்டர், தாசில்தார்......எல்லாம் அவருக்கு வேண்டியவருங்க"

கிராம முன்சீப், இங்கே பெரியவர் என்று சொல்லப்படுகிருர். ஏனெனில், அவருக்கு, போலீஸ், சப்இன்ஸ்பெக்டரை எல்லாம் தெரியும்.

நாளைக்கு ஒரு காரியம் என்ருல் அவர் தயவு தேவைப்படும். அதனுல், அவருடைய மனங் கோணுமல் நடக்கவேண்டும்.

* * *

இப்படி, இடத்துக்கேற்றபடி 'பெரியவர்'கள் பலர் இருக்கிருர்கள்! இவர்களையும் தாண்டி, சிலர், பெரியவர்களாக விளங்குவதுண்டு —அது, நூற்றில் ஒன்று. ஆனல், சராசரிக் கணக்கெடுத்துப் பார்த்

தால், நகரத்தில் பணமும் பல முக்கிய ஸ்தாபனங்களில் இடமும் பெற்றிருப்பவன் பெரிய மனிதன்—குக்கிராமங்களில் உயர்ஜாதிக்காரர்கள் பெரியவர்கள்—வேறு சில கிராமங்களில் அரசாங்கத்தின் சார்பிலிருக்கும் அதிகாரிகளுக்குத் தெரிந்தவர்கள், பெரியவர்கள்—என்று கருதப்பட்டு வருகின்றனர்.

“அதெல்லாம் இல்லை! இந்தியா சுயராஜ்யம் பெற்றதுமுதல், பெரியவனாவது! சிறியவனாவது!! எல்லோரும் ஓர், நிலைதான். யார், இந்தக் காலத்தில், யாரை மதிக்கிறார்கள்” என்று புலம்பல் புராணம் விரிப்போர் உண்டு. அவர்கள் சமூகத்தை உட்கார்ந்த இடத்திலிருந்தபடி, புரட்டுகிறவர்கள்.

உண்மையில், படிப்பு வாசனையற்ற நமது நாட்டில், ‘பெரியவர்’களாக உலவும் நபர்களைப்பற்றி ஆராயப் புகுந்தால், விசித்திர விசித்திரமாக இருக்கும்.

இந்த விசித்திரமான—ஆனால் மிகமிகத் தேவையான—ஆராய்ச்சியில், இந்திய சர்க்காரின் ரிசர்வ்பாங்கி, இலாகாவினர் ஈடுபட்டு, அதன் விபரங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

கிராமக்கடன்கள் பற்றி ஆராய ரிசர்வ்பாங்கியால் நிறுவப்பட்ட நிபுணர்கள்தான், இந்த விபரங்களை, கண்டறிந்து தெரிவிக்கின்றனர்.

கூட்டுறவு முறையைத் திருத்தி அமைத்து, சாதாரண மக்களும் நன்மை பெறத்தக்க காரியாம்சங்களை அறிந்துரைக்கவே, இந்தக் கமிட்டி நிறுவப்பட்டது.

இந்தக் கமிட்டி, கண்ட உண்மையைத்தான், நாம் மேலே தந்திருக்கிறோம்.

அவர்கள் தெரிவிக்கிறார்கள் — எதெது, கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு, தடைக் கற்களாக இருக்கின்றன — என்கிற உண்மையை.

ஜாதிக் குறுக்கீடு, பெரிய சாபக்கேடாக இருக்கிறது.

உயர்சாதிக்காரர்கள், நிலப்பிரபுக்கள், மில்காரர்கள், வியாபாரிகள் ஆகியோரின் ஆதிக்கமே, கூட்டுறவு சங்கங்களில் பெரிதாக இருக்கிறது.

இதனால், சராசரி வர்க்கத்தினர் நுழைய முடியவில்லை.

பார்ப்பனர்கள் இருந்தால், அவர்கள் தங்களவர்க்குரிய இடமாக ஆக்கிக்கொள்ள விரும்புகின்றனர். அதுபோலவே, கம்மா ரெட்டியார்களும். சாதாரண உத்யோகத்துக்குக்கூட, தங்கள் ஜாதியாரைத் தவிர வேறு யாரையும் நுழைய விடுவதில்லை.

ஒருகீழ் சாதிக்காரன் தான் சம்பாதித்த பணத்தைக்கொண்டு கொஞ்சம் நிலம் வாங்க விரும்பினாலும்கூட, மேல்சாதிக்காரர்கள் விடுவதில்லை.

அதுமட்டுமின்றி, அரசாங்க உத்யோகஸ்தர்கள், கிராமங்களில் உயர்சாதிக்காரர்கள் வீடுகளிலேயே தங்குவதால், உயர்சாதிக்காரர்களுக்கு, தங்களுக்குக் கீழே இருப்பவர்களை மிரட்ட நல்ல வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

தெள்ளத் தெளிவாக, நிபுணர்கள் கமிட்டியினர், ஆராய்ந்து விளக்கியிருக்கின்றனர்.

இந்த உண்மைகளை, யாரும் மறுத்துவிடமுடியாது.

பல காலமாக, கூட்டுறவு இயக்கம் குறித்து, நம்போன்றார் எடுத்துக் கூறிவரும் கருத்துக்கள்தான் இவை.

*

கூட்டுறவு இயக்கம்—மத்யதர மக்களின் நல்வாழ்வுக்கான அரியதோர் இயக்கமாகும்.

பொருளை வாங்கி, நியாயமான விலையில் அதை விற்கவும்—திண்டாடும் விவசாயிகளின் நிலத்தின் பேரில் கடன்கொடுத்து உதவவும், தோற்றுவிக்கப்பட்ட அரியதொரு இயக்கமாகும்.

ஆனால், இன்று, அவை, அந்தஸ்துக்கு ஒரு அறிகுறி என்றளவிலேயே இருந்து வருகிறது,

ஒரு பெரிய மனிதனுக்குள்ள அடையாளம்—அவன் ஒரு சேர்மனாயிருக்கவேண்டும். இல்லையென்றால் குறைந்தபட்சம் ஒரு கவுன்சிலராகவாவது இருக்கவேண்டும் என்று கருதப்படுவதுபோல, ஏதாவது கூட்டுறவு இயக்கத்தில் டைரக்டராக இருப்பதும் அந்தஸ்துக்கு அறிகுறி என்று கருதப்படக்கூடிய நிலைமை வளர்ந்திருக்கிறது.

இதனாலேயே, எந்த நகரப் பெரிய மனிதரை எடுத்துக்கொண்டாலும் அவர்வசம் ஏதாவது ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கிறது.

இதனால், பெரிய மனிதர்களுக்கு தத்தமது செல்வாக்கை ஸ்தாபித்துக்கொள்ளும் அரியதொரு இடமாகிவிட்டது, கூட்டுறவு இயக்கம் —அவர்களைக் கண்டால் மிரளும் ஏழைகளால், அத்தகைய கூட்டுறவு இயக்கங்களின் அருகிலும் நெருங்கமுடிவதில்லை.

இதேபோலத்தான், நில அடமான பாங்கி விஷயமும். கிராமங்களில் உள்ள மக்களில் பெரும்பாலோர் கல்வி வாசனை அறியாதவர்கள். அவர்களுக்கு, இப்படியொரு பாங்கி இருக்கிறதென்பதே தெரிவது கஷ்டம். அப்படித் தெரிந்தாலும், அங்கு சொல்லப்படும் விதிகளை அறிவதும், அதைப் பூர்த்தி செய்வதும் பெரிய தொல்லை. அப்படியே பூர்த்திசெய்து கொண்டு போனாலும், நில அடமான பாங்கிகளிலிருப்போரில் யாருக்காவது எதிரியாகவோ, வேறு சாதியாகவோ இருந்துவிட்டால்-பயன், பூஜ்யம்தான்.

இப்படி, கிராமச் சண்டைகளும், சாதிப் பூசல்களும் தலைதூக்கி, கிராமம் விளைக்கின்றன. அவன் எப்படி அதிகாரிகளை அணுகமுடியும்? அதிகாரிகள் வந்தால், அவன் வீட்டிலா, தங்குகிறார்கள்!!

இப்படி, எராளமான முட்டுக்கட்டைகள். இருப்பதினாலேயே எந்தளவுக்கு இந்த நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வளர வேண்டுமோ, அந்த அளவுக்கு வளர முடியவில்லை.

இதனையே, ரிசர்வ்பாங்கியின் நிபுணர் கமிட்டி, எடுத்துக் காட்டுகிறது.

நாட்டின் வாழ்வில் நல்லதொரு புதுமை வளரவேண்டுமென்றால்,

## வெளிநாடுகளில் மாணவர்கள்

### ஐ. நா.வின் புள்ளிவிவரம்

ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம் சமீபத்தில் பிரசுரித்துள்ள “வெளிநாட்டில் கல்வி” என்ற ஆண்டு அறிக்கையில் கடந்த வருஷத்தில் 70 நாடுகளைச் சேர்ந்த 2014 பல்கலைக் கழகங்களிலும் மற்ற ஸ்தாபனங்களிலுமாக சர்வதேச மாணவர் பரிவர்த்தனைத் திட்டப்படி 1,07,000 பேர் சேர்ந்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது இதில் இந்தியாவைச் சேர்ந்த மாணவர் 2,400 ஆகும்.

அவைகளை கூட்டுறவு இயக்கங்கள் மூலம் சாதிப்பதே, எளிதும் பயனுமுள்ள காரியமாகும்.

கறையான் புற்றெடுக்க, அங்கே கருநாகங்களல்லவா, கொட்டமடிக்கின்றன.

அவைகளின் கொட்டம் அடக்கப்பட்டு, இதுபோன்ற பொது இயக்கங்களில், பொதுத் தொண்டில் ஆர்வம் கொண்டோரும், சமுதாயச் சிற்பிகளும் பங்கெடுக்கும்படியான ஒரு நிலைமை உண்டாக்கப்படவேண்டும்.

ஆனால், இதற்கு, அவ்வளவு எளிதிலா 'பெரிய மனிதர்'கள், சம்மதித்துவிடுவார்கள்.

அவர்களுடைய சுகபோகச் சோலையாகவன்றோ, இந்தச் சங்கங்கள், இருக்கின்றன! எப்படி, இடம் தருவர்? இளகுமா, இதயம்.

இதனை, அரசினர், தெளிவாக எண்ணிப்பார்க்கவேண்டும் — ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சாதாரண மக்களுக்கும், விவசாயிகளுக்கும் எப்படி உதவிகள் புரியலாம் என்பதற்காகத்தான் இந்த நிபுணர் கமிட்டி, ஆராய்ந்து இந்தக் குறைபாடுகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

கண்டுபிடித்ததோடு இல்லாமல், அவைகளைப் போக்கும் வழிவகைகளையும், கண்டு-அவைகளை அமுல் நடத்தவேண்டும், அப்படிச் செய்தால், பணதிபதிகளின் அந்தஸ்து கூடங்களாகவும், உயர்ஜாதிக்காரர்களின் வேட்டைக்காடாகவும் இருக்கும், கூட்டுறவு இயக்கங்கள், மக்களின் கூடங்களாக முடியும். செய்கிறதா, அரசு, எனப் பார்ப்போம்!

ஏனெனில், அவ்வளவு எளிதான காரியமல்ல இது; ஏனெனில், புகுந்துகொண்டிருப்பவை, ஜாதீயம்! பணதிக்கம்! என்னும், கருநாகங்கள்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைத் துரத்துகிறதா என்கிற விபரங்களை வைத்தே பிறர் மதிப்புப் போடுகின்றனர்.

அறிஞர்கள் எத்தனை பேர்? விஞ்ஞான விளைவுகள் என்னென்ன? மண்ணுக்குள் கிடக்கும் வளம் என்ன? அதனை வெளியிலெடுத்து பயன்படுத்தும் விற்பன்னர்கள் உண்டா? உலக அரங்கில் முகிழ்க்கும் விஞ்ஞான ஆராய்ச்சிகளை அப்போதைக்கப்போது ஏற்றுக்கொள்கிறதா? அதனை, மக்களுக்குத் தந்து, மக்களது சக்தியைப் பெருக்குகிறதா?—இப்படி வைத்தே மதிப்பிடுகின்றனர்.

இந்தக் குணதிசயங்கள் எதுவும் குன்றியதில்லை — என்கிறார். பிரகாசா.

**எல்லாம் உளது**—என்கிறார்.

**எந்தத் துறையில் புகுந்தாலும் வெற்றி பெறக்கூடிய விற்பன்னர்கள் உண்டு**— என்கிறார்.

ஆனால்......!!

அந்த விற்பன்னர்கள் யாவரும் டாடா கம்பெனிக்கும், பிர்லா ஆலைக்கும், பஜாஜ் பள்ளிக்கும் பணம் நாடிச் சென்று கிடக்கிறார்களேயன்றி, விஞ்ஞானிகள் இன்சினீயர்கள் ஆகியவர்களின் சேவை தென்னாட்டுக்குப் பயன்படவில்லை.

காரணம், தென்னாட்டில், அவர்களீடுபடவேண்டிய நிலையில், எந்த வசதியும் இல்லை.

மக்கள் சக்தியோ, எதுவும் வேலையில்லாததால், மலேயாவுக்கும் பர்மாவுக்கும் ஓடிக்கொண்டிருக்கிறது.

சிந்தனைச் சிற்பிகளோ, சிதறுகின்றனர்—பிற இடங்களுக்கு.

மண்ணுக்கு அடியில் கிடக்கும் செல்வங்களோ—தூங்குகிறது.

இப்படி, எல்லா வசதிகளிருந்தும், ஏங்குகிற தேசத்தை, 'அட்லாசில்' எங்காவது காட்டமுடியுமா?

**கலை**—முதலிடம்.

**புராதனப் புகழ்**—முதலிடம்.

**திறமை**—இதுவே இடம்.

**மனவளம்**—ஏராளம்,

**மண்வளம்**—போட்டது, பொன்.

**இன்சினீயர்கள்**—பலர்.

**விஞ்ஞானிகள்**—பலர்.

இன்னும் என்ன வேண்டும், ஒரு நாடு வாழ? பணமும், முயற்சியும் தான் தேவை!

பணம் தரவேண்டிய டில்லி, பராமுகம் காட்டுகிறது,

முயற்சித்தால், மூக்கை உடைத்து அனுப்புகிறது.

சென்னை சர்க்காரோ, 'செய்ய என்னிடம் ஏது அதிகாரம்' என்று முகாரி பாடுகிறது.

கவர்னர் பிரகாசாவோ, அழகாக விளக்குகிறார், "வடநாட்டிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது எதுவும் இல்லை, உங்களுக்கு என்று"

*

மணம் தரும் மல்லிகைத் தோட்டம், மருதனுடைய சொத்து. அவனோ, மயானம் காக்கும் முத்தனிடம் சென்று முழங்காலிட்டு,' அண்ணே! ஆறுநாளாய்ப் பட்டினி. அகப்பட்ட கூலியில், கொடேன் ஏதாச்சும்?,' என்று பல்லைக் காட்டினால், எப்படியிருக்கும்? அதைவிட வேடிக்கையாயிருக்குமல்லவா, பூத்த மல்லிகையையெல்லாம் கொண்டுபோய் அவன் காலடியில் கொட்டிவிட்டு, ஒரு அரையணா! காலணா! என்று கையேந்துவது.

*

அதே கதியில், தென்னாடு இருக்கிறது.

அதனால்தான், கவர்னர் குறிப்பிடும் பிரிவினை இயக்கம், **பலமாக** வளர்ந்து வருகிறது.

இந்த வளர்ச்சியை கவர்னர்— அறிகிறார்.

அதோடு,வடநாடு,தென்னாட்டை வஞ்சிக்கிறது என நாம் சொல்வதன் உண்மையையும் உணருகிறார்.

அதோடு, வடநாட்டிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது எதுவும் இல்லை!—என்றும் தெரிவிக்கிறார்.

அவரது கூற்றை **"இந்தியாவுடன் ஒன்றாகயிருந்தால்தான், நாம் பல நன்மைகளைப் பெற முடியும்"** என்று சொல்லும் தேசிய நண்பர்களின் பார்வைக்கு, வைக்கிறோம்.

எல்லாம், இருக்கிறது—இங்கு!

ஆனால், அவைகளை அனுபவிக்கும், அதிகாரம்தான், இல்லை!

இந்த அதிகாரத்தைக் கோரும்—உரிமை முழக்கமே, திராவிடநாடு திராவிடருக்கே!

இந்த உரிமை முழக்கத்தின் அளவையும் சக்தியையும், வடநாட்டுத் தூதுவர் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

அவரது பேச்சு, நிலைமையின் விளைவு!

அந்த நிலைமை வளர்ந்து வரும் உரிமைக் குரலின் விளைவு.

ஆகவே, மகிழ்கிறோம்—அந்தக் குரல், வளரும்! வளரும்! வாகை சூடும்வரை வளரும்!! என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம், ★

# "இடது பாதம்!"

எவருமே சாதிக்கமுடியாத, இதுவரை வாசித்திராத புத்தகம்ஒன்று சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. புத்தக வெளியீட்டார் வார்பார்க் கம்பெனியார்.

இந்த புத்தகத்தில் போர்க்களத்து வீரர்களைப்பற்றி சிறப்பான முறையில் எழுதப்பட்டிருக்கிறது. கடலில் உண்டாகும் புயலிலே சிக்கித் தவிக்கும் ஒருவனைக் காப்பாற்ற முடியாத அத்தகைய துன்பம் மிகுந்த சம்பவங்களை தன் வாழ்க்கைப் புத்தகத்திலே அத்தியாயங்களாகக் கொண்ட ஒருவன் எழுதிய புத்தகம். இந்தப் புத்தகத்தில் கையெழுத்துப் பிரதிகள் அனைத்தும் அந்த ஆசிரியன் பேனாவை தன்னுடைய இடதுபாத விரல்களின் மத்தியிலே வைத்து எழுதப்பட்டதாகும்.

துயரத்துக்குப் பேர்போன அந்த எழுத்தாளனின் சோக வரலாற்றைப் படியுங்கள். 1934–ம் ஆண்டு டப்ளின் செங்கல் வேலைக்காரர் ஒருவருக்குப் பிறந்தான். தந்தைக்கு இருபத்திரண்டு குழந்தைகள். அதில் ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தவன்தான் துன்பத்தின் பிறப்பிடமான **கிரிஸ்டி ப்ரௌன்.** உலகத்தில் பிறக்கும்போதே அதிர்ஷ்டமில்லாதவனாக, துன்பச் சுமையைத் தாங்கிக்கொண்டே பிறந்தான். வாழ்க்கையிலே பிறரைப்போல மகன் முன்னேற வேண்டுமென்று தாய் கருதுவாள். இதுதான் உலக வழக்கம். அந்த அன்னையின் எண்ணத்திலே எப்போதும் வேதனையை வளர்த்துக்கொண்டே வந்தது க்ரீஸ்டியின் வரலாறு. அவனால் கழிக்கப்பட்ட நாட்கள் கணக்கற்றவை. ஆனால் அவையனைத்தும் வேதனையின் அணுக்கள். இன்றைய நாள் இன்பமாகக் கழிந்துவிட்டது. அடுத்த நாளை எதிர்பார்க்கும மகனாக இல்லை கிரீஸ்டி. அவன் பிறருடைய உதவியையே எதிர்நோக்குபவனாக இருந்தான். அவன் மூளைக் கோளாறு காரணமாக வாதநோய்க் கண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

குழந்தையின் மழலை மொழி கேட்கத்தான் விரும்புவாள், பெற்றெடுத்த தாய். மகன் என்ன பேசுகிறான் என்று எதிர்ப்பார்த்துக்கிடப்பாள். இந்த ஆசை எண்ணங்களை அழித்துவிட்டது காலம். அவன் பேசமுடியாத நிலையில் இருந்தான். பேசாமலிருந்தால் எப்படி? பேசித்தான் பார்ப்போமே என்று முயற்சிப்பான் கிரீஸ்டி. அந்த முயற்சி அவன்வாயிலிருந்து பலத்த கேட்கவொண்ணாத சப்தத்தை உண்டாக்கும். பேசத்தான் அவனால் முடியவில்லையென்றாலும் நடப்போம் என்று எழுந்தான். அந்த பிஞ்சு உள்ளத்திலே மற்றவர்களைப் போல நடக்க வேண்டுமென்று எண்ணம். நடக்க முயற்சித்ததில் அவன் கீழே விழத்தான் முடிந்தது. அவனது உடலைத் தாங்கும் சக்தியை இழந்துவிட்டன அவனது கால்கள்.

குழந்தைகளின் உள்ளத்துக்கு குதூகலத்தைத் தருவது விளையாட்டுப் பொம்மைகள். அந்தத் துளி இன்பத்தைக்கூட அவனால் அனுபவிக்க முடியவில்லை. மற்ற குழந்தைகள் தாவி விளையாட்டுப் பொம்மையை வைத்து விளையாடுவது போல கிரிஸ்டியும் செய்தான். அவனது கரங்கள் பொம்மைகளைத் தொட மறுத்தன. இந்தச் செய்கையிலும் அவனுக்குத் தோல்விதான். டாக்டரிடம் காட்டிய போது, அவர் அவனுக்கு மூளைக் கோளாறு என்று கூறி விட்டார். இதைக் கேட்டு கிரிஸ்டியின் தாயார் மகனின் நிலையைக் கண்டு மனங் குழம்பினாள்.

ஆறு வயதுச் சிறுவனான கிரீஸ்டியின் முன்னே சாக்கட்டித்துண்டு இருந்ததைக் கண்டு அவன் அதை எடுத்து இடதுகால் விரல்கள் மத்தியிலே வைத்துப் பலகையில் எழுதினான். இந்தப் புதுச் செய்கை அவனது தாய்க்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆகவே அவன் எழுத்துக்களை எழுதும் விதத்தைக் கற்றுக் கொடுத்தாள்.

இடது காலிலே எழுதிப் பழக்கப்பட்ட அவன் காலினாலேயே சித்திரமொன்றை எழுதி பரிசும் பெற்றான். தனது பன்னிரெண்டாம் வயதிலே, டாக்டரின் எண்ணத்தையே மாற்றிவிட்டான் தன் முயற்சியால். வார்த்தைகளை ஒழுங்காக எழுதக் கற்றுக்கொண்டான். அதற்குப் பிறகு தன் கற்பனையின் வடிவாக்கினான் "எனது இடது பாதம்" என்ற புத்தகத்தை. இந்த புத்தகத்தின் பாதிப் பிரதிகள் அவனாலேயே எழுதப்பட்டன. பிற்பகுதி தன் சகோதரனிடம் விளக்கி எழுதச் சொன்னதாகும். தனது பதினெட்டாம் வயதில் லௌடர்ஸ் என்னும் இடத்துக்குச் சென்றான். டாக்டர் ராபர்ட் காலிஸ் என்பவரின் துணையால் நன்றாகப் பேசவும் கற்றுக் கொண்டான். மின்சாரத்தால் இயங்கும் டைப்ரைட்டிங் மிஷினில் ஒரு கையாலேயே அடிக்கும் திறமை பெற்றான். "எனது இடது பாதம்" என்னுடைய தாயாரால் அளிக்கப்பட்டதே என்று கிரிஸ்டி அவரிடம் கூறினாராம். சோகச் சுமையால் அமுங்கிவிட்ட அவனது உள்ளத்துக்கு உவகை அளித்தது அவன் எழுதிய புத்தகம்! தொல்லைகளை தூசுகளென நினைத்த கிரிஸ்டிக்கு என்றென்றும் புகழைத் தரக் காத்திருக்கிறது "எனது இடது பாதம்."

★

# வாழ்க அறிவகம்!

**மகாராஜாவும், மந்திரிமார்களும். ஆள்வோரும் கலந்துகொள்ளும் அதியற்புத வைபவமாக முடிந்திருக்கிறது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா.**

**விழாவை நடத்தியோர், விழாவில் கலந்துகொண்டோர் ஆகியோரது செயல், எண்ணம், ஆகியவைகளைவிட நமது பல்கலைக் கழகம் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது எனும் பெருமகிழ்ச்சியில் திளைக்கும் மாணவ மணிகள், ஏராளம்.**

**விழாவில் கலந்துகொண்டோர், பேசியோர் அனைவரும் மறைந்த செட்டிநாட்டரசரைப் பற்றியும்; அவர்தம் புதல்வரைப் பற்றியும், பலபடப் பாராட்டியிருக்கின்றனர். 'செட்டிநாட்டு' குடும்பம். செய்துள்ள பயனுள்ள காரியம், நமது பல்கலைக் கழகம் என்பதை, நாடு அறியும். அவர்கள் குடும்பத்துக்கு, மீளாத புகழ் தரும், ஒரு சோலையாகயிருப்பதும், நமது பல்கலைக் கழகம்தான்.**

**அந்தக் கழகம், 25 ஆண்டுகளை முடித்திருக்கிறது.**

**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கும் நமது அறிவியக்கத்துக்கும், நெருங்கிய தொடர்புண்டு. 'எமது வீடு,' என்று பெருமையுடன், நம்மால் அழைக்கப்படும், பேறுபெற்ற இடம், அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகும்.**

**தமிழ்வளர் சோலை!–என்பர், அறிந்தோர். தமிழுக்கு அங்கு தரப்பட்டு வரும், இடமும் சிறப்பும், பெருமைக்குரியன. எனினும். எதிர்பார்த்த அளவுக்கு, பல்துறைகளில், அங்கும் தமிழ் மணம் ஏற்படவில்லை எனும் குறை பலருக்குண்டு.**

**அரிய பேராசிரியர்கள் பலர், அவர்**

களைச் சுற்றி திறமை மிகுந்த விரிவுரையாளர்கள்,சிந்தனையும் தெளிவும் பெற்ற மாணவமணிகள் ஆகியோரைக் கொண்டது, அ'நகர். எனினும், பல துறைகளில், அது வளரவேண்டிய கட்டத்திலிருக்கிறது, என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தமிழில், அது செய்யவேண்டிய காரியங்கள், ஏராளம். அதுபற்றி டாக்டர் மணவாளராமானுஜம், ஆர். கே. சண்முகம் ஆகிய துணை வேந்தர்களின் காலத்தில், பல திட்டங்கள் போடப்பட்டன. அவைகளில், எதெது மிகவும் அவசியமோ, அதன் பக்கம் கவனம் செல்லவில்லை, காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிய ஆராய்ச்சியை, பல்கலைக் கழகத்தின் சார்பில் செய்ய வேண்டுமெனத் துடியாய்த் துடித்தார், மணவாளராமானுஜம். நிறைவேறவில்லை! பதிலாக, இராமாயணப் பதிப்புகள், நடைபெற்று வருகின்றன.

வெள்ளி விழா! — கீர்த்திக்குரிய சம்பவம். இந்த நேரத்தில், பல்கலைக் கழக வளர்ச்சியில் அக்கரை கொண்டிருப்போருக்கு நாம் தெரிவித்துக் கொள்ள விரும்புவதுண்டு—பல மணிகள், அங்கு பணியாற்றியும், விரைவில் சலிப்புள்ளத்தோடு வெளியிடம் தேடும் நிலைமைகள், அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. காரணம், வெள்ளையப்பன்தான்! அந்தத் துறையில், அறிவு மணக்க பணிபுரிவோர், அகமும் புறமும் குளிர பணியாற்றும்படிச் செய்யும் வழி வகைகளை, நிர்வாகம் செய்வது—வெள்ளி விழாவுக்குப் பெருமை யூட்டியதாக இருக்கும்.

அதுமட்டுமின்றி, பல்கலைக் கழகத்துக்கு துணை வேந்தர்கள் நியமிப்பதில், ஏதோ ஒரு 'மோகம்' காட்டப்பட்டு, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களே அன்றி பல்கலைக் கழகத்துக்குப் பயனளிக்கும் பலரை, பெறத் தவறி வருகிறது. இல்லையென்றால், இங்கும் துணை வேந்தர், காசிப் பல்கலைக் கழகத்துக்கும் துணை வேந்தர் எனும் நிலையில் இருக்க முடியாது, சச்சிவோத்தமர்!

விமரிசையாக வெள்ளி விழா கொண்டாடப்படும் இந் நேரத்தில், நாம் இவைகளைக் குறிப்பிடுவதன் நோக்கம் — 'அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அறிவியக்கம், எதிர்பார்க்கிறது. அங்கிருந்து கிளம்பும் பொறிகளால், நாடு நலம் பெற வேண்டுமெனப் பெரிதும் எதிர்பார்க்கிறது.

அந்தவகையில் பணியாற்றிவரும் அனைவருக்கும், தொழிலாளர், மாணவர்கள் எல்லோருக்கும் நமது வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம், வாழ்க, அறிவகம். வளர்க அண்ணாமலைப் பல்கலைக் கழகம். ★

# ஊரார் உரையாடல்

[சாமா சாஸ்திரிகள், திண்ணையில் சாய்ந்துகொண்டிருக்கிறார். சங்கரன் 'இந்து' பத்திரிகையுடன் அந்தப் பக்கம் வருகிறான்]

சாமா:- சங்கரா! அதென்ன கையிலே, 'இந்து'வா......?

சங்:- ஆமாம், மாமா, ஆமாம்!

சாமா;- இன்னைக்கு ஏதாவது போட்டிருக்காளோ......

சங்;- நிறையப் போட்டிருக்காள்.... எந்த விஷயத்தைப் பற்றிக் கேட்கிறேள்......நம்ப நேரு லண்டனிலே கலந்துண்டிருக்கிற காமன் வெல்த் மாநாட்டைப்பத்தி கேட்கிறேளா...... ரஷ்யாவிலே மாலொங்கோவ் ராஜினாமா செய்துட்டு புதுசா புல்கானின் பிரதமராயிருக்காரே அதைப்பத்தியா ......இல்லே! திருவாங்கூரிலே பட்டம் தாணு ஆட்சி கவிழ்ந்துட்டுதேஅதைப் பற்றியா?

சாமா:- அதைப்பற்றியில்லே, சங்கரா! நம்மளவர் கிருஷ்ணமாச்சாரி விஷயமா ஏதாவது, வந்திருக்கோ.....

சங்:- ஓ அவரைப்பற்றிக் கேக்கிறேளா... வந்திருக்கே, மாமா! நேரு லண்டனுக்குப் புறப்படறப்போ, ஒரு செய்தி அனுப்பிச்சாராம் — கடைசி தடவையா என்ன சொல்றீர்னு? நேரு அந்த லெட்டரை வாங்கி வைச்சுண்டு, விமானத்திலேறி பறந்துட்டாராம்! விடலை, இவர். உடனே, ராஜினாமாக் கடிதம் எழுதி, அதை நேரா லண்டனுக்கே அனுப்பிச்சிட்டாராம்...

சாமா:. அப்படியா? சங்கரா! ஊர்லே, என்ன பேசிக்கிறாங்க!!

[அப்போது, அவர்கள் பேச்சைக் கவனித்தபடி அங்கே வந்த உள்ளூர் காங்கிரஸ் காரியதரிசி, காத்தமுத்து...]

காத்:- என்ன பேசிக்கிறாங்க! ஒரு பீடை ஒழிஞ்சுதுன்னு, பேசிக்கிறாங்க.. இவர்தான், மந்திரிசபையைத் தூக்கித் தலைமேலே, வைச்சுக்கிட்டிருந்தாரோ!

சாமா:- காத்த முத்துவா? வா! வா!! அப்படிச் சொல்லிடாதேப்பா... கிருஷ்ணமாச்சாரியாலே, நம்ப நேருவுக்கு எவ்வளவோ, ஆலோசனைகள் எல்லாம் அடிக்கடி கிடைச்சுது... இவர் என்ன லேசுப்பட்டவரா?

காத்:. அட, போங்க சாமி! இந்த ஆளுக்கு நாட்டு நன்மையிலே அக்கரையிருந்தா, இந்த நேரத்திலே விலகுவாரா?

சங்:- என்ன காத்து! அப்படிச் சொல்றே? தேசத்துக்காக எதையும் அர்ப்பணம் செய்யக்கூடியவரப்பா, இவர்!

காத்:- ஆமாமாம்! வெள்ளைக்காரன் கம்பெனிக்கு வால் பிடிக்கிற தொழிலை முதலிலேவிட மனசில்லே......இவரை மந்திரியாக்கிக் கொண்டுபோய் வைச்சதே தப்பு. இப்ப, அந்த வெள்ளைக்காரங்களுக்காக, மந்திரி வேலையை விடுறேன்னு மிரட்டுறாரு......போனாப் போகட்டுமே.

சாமா:- அபாண்டமா, அவர்மேலே தப்பு சொல்லாதே, காத்தமுத்து.

கா;- நான் சொல்றதா அபாண்டம்? ஏஞ்சாமி! ரஷ்யாக்காரங்க, நம்ம தேசத்திலே, இரும்பாலை கட்டித் தரேன்னு வந்தா, இவருக்கென்ன? வெள்ளைக்காரங்களோடு சேர்ந்து பிர்லா கட்டுறதுக்கு அனுமதிக்காமெ, இதுக்கு அனுமதி கொடுக்கக்கூடாதுன்னா சண்டித்தனம் செய்யறது...? இது பிடிக்கல்லேன்னா மந்திரி சபையிலேருந்து ராஜினாமா செய்யறேன்னு சொல்லட்டும்...,சரி;...ஒரேயடியா அரசியலிலேயிருந்து விலகிடப்போறேன், காங்கிரசிலேயும் இருக்கமாட்டேன், பார்லிமெண்டு மெம்பர் பதவியும் எனக்கு வேணாம், அப்படி இப்படி மிரட்டினா...இந்த ஆளைப்பத்தி என்ன சொல்றது?

சாமா;- பேசு! பேசு! நீ பேசறதையெல்லாம் பேசு...

காத்:- உண்மையைச் சொன்னால் உடம்பெரிச்சல்தான் சாமி வருது எல்லாருக்கும்...அது கிடக்கட்டும்...யோக்கியராட்டம் ராஜினாமா லெட்டரை லண்டனுக்கு அனுப்பிச்சாரே! இவர், நேரு வருகிற வரைக்கும் டில்லியிலேதானே இருக்கணும்?

சாமா:- இல்லாம எங்கே போயிட்டார்?

காத்:- எங்கே போயிட்டாரா? முதலாளிகள் வாழ்ற, பம்பாய்க்கும், ஆமதாபாத்துக்கும் பறந்துபோய் அவர்களோடே ஆலோசனை பண்ணியிருக்கார்......என்னசாமி அர்த்தம்? சொல்லுங்க, சாமி!

சங்:- அப்பா, காத்து, நீ போய்ட்டு வா......

காத்:- ஊம்! இதெல்லாம் ஆளை எடைபோடத் தெரியாததன் விளைவு... ...அவரைச் சொல்லி என்ன பிரயோசனம்......எங்க நேருவைச் சொல்லணும், சாமி! நேருவைச் சொல்லணும்!

[காத்துமுத்து போகிறான். சாமாவும் சங்கரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகின்றனர்.]

★

## வரப்பெற்றோம்

காஞ்சீபுரம் பிரபல பட்டு, சரிகை வியாபாரம் பி. எஸ்.கே. சன்சாரால் வெளியிடப்படும் அழகான பெரிய அளவுக் காலண்டர் வரப்பெற்றோம்.

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

**[பேராசிரியர் இருதயராஜ்]**

16-வது நூற்றுண்டிற்குமேல் ஐரோப்பிய அரசியற் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால், பொதுவாக ஐரோப்பாவின் கருத்துக்கள் என்று எதையும் கூற முடியாது. அவ்வப்பொழுது இதாலி, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் தோன்றிய அரசியல் அறிஞர்களின் கருத்துக்களையும் அவைகளால் ஏற்பட்ட விளைவுகளையுமே இனி ஆராய முடியும்.

### மாக்கியவல்லி (Machiavelli) 1469–1527.

இதாலியில் ப்ளாரன்ஸ் என்ற நகரத்தில் 1469-ம் ஆண்டு மக்கியவல்லி என்ற அரசியல் அறிஞர் தோன்றினர். 30-வது வயதில் அரசாங்கக் காரியாலயத்தில் வேலையில் அமர்ந்தார். அதன் பின் வெளிநாடுகளுக்குத் தூதுவராக அனுப்பப்பட்டார். அதனால் அவருக்கு உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் அதிக அனுபவமும் நேரடியான தொடர்பும் ஏற்பட்டது.

அவர் தோன்றிய காலத்தில் ஐரோப்பாவில் எங்கு பார்த்தாலும் தேசிய உணர்ச்சி வேகத்தால் பலமுள்ள சிறு சிறு ராஜ்யங்கள் உண்டாயின. நாட்டுப் பற்றை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்குள்ளே ஏற்பட்ட ஒற்றுமையும், ஒற்றுமை குலைந்தால் பிற நாட்டுக்கு அடிமைப்பட வேண்டும், தேசிய சுதந்தரம் பறிபோகும் என்ற பயமும் மக்கள் தங்கள் நாட்டு மன்னனுக்கு எல்லா வகைகளிலும் பக்கபலமாக இருந்து ஆதரவு கொடுக்க செய்தது. எனவே ஐரோப்பாவில் பல நாடுகளிலும் மன்னர்கள் மக்களின் இந்த போக்கைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு தங்கள் பலத்தை பெருக்கிக் கொண்டனர்.

ஆனல் இதாலியில் மட்டும் ஒற்றுமை குலைந்தது. வெனிஸ், ப்ளாரன்ஸ், நேப்பிள்ஸ், மிலான் என்று பல ராஜ்யங்கள் தோன்றி அவர்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டு, மன்னர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி காரியங்களை சாதித்துக் கொண்டு இதாலி நாட்டையே ஓர் போர்க்களமாக மாற்றி விட்டார்கள்.

இத்தாலியின் பெருமையைத் திரும்ப நிலைநாட்டவேண்டும், ஒற்றுமை உண்டாக்கவேண்டும் என்ற நினைப்பில்தான் மக்கியவல்லி தனது அரசியல் நூல்களை வெளியிட்டார். அவருடைய கருத்துக்கள் 16-வது நூற்றுண்டில் பொதுவாக ஐரோப்பாவிலும் குறிப்பாக இதாலியிலும் பரவிக்கொண்டிருந்த மத சார்பற்ற மறுமலர்ச்சி இயக்கத்தினுல் பெரிதும் உருவாக்கப்பட்டன.

அரிஸ்டாட்டில் அரசியலில் புகுத்திய கருத்துகள் மக்கியவல்லியின் மனதைக் கவர்ந்தன. அவை அவருடைய கருத்துக்களை உருவாக்குவதற்குப் பெரிதும் பயன்பட்டன.

### அவர் கருத்து

மனித சுபாவம், அதனால் விளையும் மனிதனுடைய பிரச்சனைகள் எல்லாம் எக்காலத்திலும் எல்லாவிடத்திலும் ஒன்ருகத்தான் இருக்க முடியும். அதனால் நிகழ் காலத்தில் ஒரு பிரச்சனைத் தோன்றினல் அதற்கு முற்காலத்தில் அம்மாதிரிப் பிரச்சனை தோன்றிய பொழுது என்ன முடிவு காணப்பட்டதோ அதையே இப்பொழுதும் முடிவாகக்கொள்ளலாம். அது போலவே இத்தாலியில் ஒற்றுமைக் குறைவால் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு முடிவு காண வேண்டுமானல் கிரீஸ், ரோம் ஆகியவைகளின் பூர்வீக சரித்திரத்தை ஆராய்ந்து அதிலிருந்து முடிவு

மாக்கியவல்லி

கட்டமுடியும்" இவ்வாறு வாதாடினர், மாக்கியவல்லி.

எட்டாத ஒரு இலட்சியத்தைப் பற்றிக் கனவு கண்டுகொண்டு ஆகாத காரியங்களைப் பற்றி வேதாந்தம் பேசும் போக்கினரல்ல மக்கியவல்லி. நடைமுறையில் நல்லாட்சி நிறுவுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதுதான் அவர் கண்டுபிடிக்க விரும்பியதெல்லாம். "அரசியல் அமைப்பை அழகுபடுத்தி பெருமைப்பட்டுக் கொண்டிருப்பதை விட அரசாங்க நடப்பிலே சிக்கல்களும் முட்டுக் கட்டைகளும் இல்லாமல் பார்த்துக் கொள்வதே சிலாக்கியமானது. பிரச்சனைகளை பிரமாதமாக்கிக் கொண்டு ராஜ்யத்தை அழிய விட்டுவிடக் கூடாது" என்று அவர் வாதாடியபொழுது ஆளுபவர்களுடைய கண்ணேட்டத்தில் தான் பேசினரே தவிர ஆளப்படுபவர்களுடைய கட்சியைப் பற்றி அவர் கவலைகொண்டதாகத்தெரியவில்லை. அதனுல்தான் அவர், தனி மனிதன் ஒருவன் செய்யத்தகாத, செய்தால், நெறியல்லாததாக நோக்கப்படும் காரியங்களைக்கூட ஆளுபவர்கள் தடையின்றி ராஜ்ய நலத்துக்காக செய்வதில் தவறில்லை என்ற முடிவுக்கு வந்தார். இந்த முடிவின் பிரகாரம் தனி மனிதருக்கு ஒரு நெறி; பொதுஸ்தாபனங்களுக்கு வேருரு நெறி என்று தோன்றுகிறது. தனி மனிதனுடைய செயலொன்று தவருனதாகக் கருதப்படலாம். ஆனல் அதையே அரசாங்கமோ அதை நடத்துபவரோ செய்தால், அது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய

---

### சைகிள்

இந்திய உபகண்டத்தில் முதன் முதலாக சைகிள் ஓட ஆரம்பித்தது 1890-வது ஆண்டில் என்று தெரியவருகிறது.

தற்போது இந்தியாவில் மொத்தம் 25-லட்சம் சைகிள்கள் உபயோகத்திலிருப்பதாக சுமாராக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருக்கும் சைகிள் கம்பெனிகள் மொத்தம் ஒன்பது. இவைகளில் 'தெற்கே'யிருப்பது, ஒரே ஒரு கம்பெனிதான்.

தாயிருந்தால் அதை நல்லதொரு செயலாகவே கொள்ள வேண்டும் என்றார்.

**அச்சம் காட்டி...!**

மனித சுபாவத்தையும், மனிதருடைய நடவடிக்கைகளையும் பற்றிப் பேசும்போது மனிதன் இயற்கையாகவே, பயம் நிறைந்தவன், மந்தமதி படைத்தவன், தனக்குச் சாதகமாக இருந்தால் அக்கிரமும் அநீதியும் இழைக்கத் தயங்கமாட்டான். அதனால் மனிதர்களை ஏமாற்றி நம்பும்படி செய்து அவர்களை பலமுள்ள ஒருவர் ஆட்டிப்படைப்பதே சாலச் சிறந்தது என்று மக்கியவல்லி நம்பினார். அவர் அவ்வாறு நம்பியதற்கு அவர் கண்முன்னே இத்தாலியில் மக்களுடைய நடவடிக்கைகளே போதிய சான்றாக இருந்தது. தன்னலமே உருவாக, நன்றி கெட்டவர்களாக, ஏய்த்துப் பிழைப்பவர்களாக, பயங்கொள்ளிகளாக, பேராசைக்காரர்களாக மக்கள் தன்காலத்தில் இதாலியில் வாழ்ந்து வருவதை மக்கியவல்லி கண்ட பிறகே இந்த முடிவுக்கு வந்தார். தங்களுக்கு நன்மை பயக்குமென்று தெரிந்தால் தான் மக்கள் நல்லவர்களாக நடிப்பார்கள், அச்சம் என்பதே மனிதர் வாழ்க்கையை உருவகப்படுத்துகிறது. அன்பைக் காட்டுவதைவிட அச்சத்தைக்காட்டிபலகாரியங்களை சாதிக்க முடியும். அதனால் அரசன் அச்சத்தையூட்டியே மக்களை அடக்கியாள வேண்டும். ஆனால் மக்களுக்கு அச்சத்தைத்தான் உண்டாக்க வேண்டுமேயல்லாது அவர்களுடைய அருவருப்பையோ அல்லது வெறுப்பையோ வேந்தன் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது" என்றார்.

மக்கியவல்லி நம்பினதைப் போல் மனித சுபாவம் இயற்கையிலேயே அவ்வளவு கெட்டதென்று நாமும் கொண்டால், நிச்சயம் மக்கியவல்லியின் முடிவுக்கே வந்து தீருவோம். மனிதனைத் திருத்தவோ, மனிதப் பண்புகளை வளர்க்கவோ முடியாது என்று மக்கியவல்லி நினைத்தது தவறு. அவருக்குப்பின் தோன்றிய அறிஞர்கள் "மனிதன் இயற்கையிலேயே நல்லவனோ கெட்டவனோ, அவன் நாளடைவில் சேர்க்கையினாலும் சகவாசத்தினாலும், சூழ்நிலையாலும், சுற்றுச் சார்புகளினாலுமே நல்லவனாகவோ, கெட்டவனாகவோ மாறுகின்றான்" என்று மக்கியவல்லியை கண்டிக்கும் முறையில் கூறியிருக்கிறார்கள்.

**'மணிமுடி'களுக்கு!**

மக்கியவல்லிக்குமக்களாட்சியைப் பற்றி நேரடியான அனுபவம் கிடையாது அவருடைய காலத்தில் எங்கு பார்த்தாலும் மன்னராட்சியே அமைந்திருந்தது. எனவே அவருடைய நூல்களிலெல்லாம் மன்னர்களைப்பற்றியே எழுதினார். "இளவரசன்" என்ற நூலில் எப்படி ஒரு வேந்தன் தன்னைக் காப்பாற்றிக்கொள்வது, நாட்டை பகைவரிடமிருந்து காப்பாற்றுவது, என்பது போன்ற பிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்தார். வேந்தன் வெற்றிகரமாக ஆட்சி நடத்துவதற்கு சட்டம் பலாத்காரம் என்ற இரண்டு ஆயுதங்கள் வேண்டும். அவனுக்கு பகுத்தறிவும் வேண்டும் மிருக பலமும் தேவை. மிருக பலம் என்று குறிப்பிடும்போது மக்கியவல்லி ஒருவேந்தனுக்கு சிங்கத்தினுடைய பலமும், குள்ளநரியின் தந்திரமும் வேண்டும் என்று விளக்கினார். தன்னுடைய குறிக்கோள் எது, விருப்பம் என்ன என்பதை மன்னன் மக்களிடமிருந்து மறைத்துக் கொண்டு நரியின் தந்திரத்தைக் கையாள வேண்டும், ராஜ்யம் சிதையாமல் காப்பாற்றுவதற்காக மன்னன் எதையும் செய்யலாம். அக்கம்பக்கத்திலிருப்பவர்களை மன்னன் எப்பொழுதும் எதிரிகளாக மனதிற்கொண்டு எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவேண்டும். எதிரியென்று நிச்சயமானால் அவன் தயாராகுமுன் அவனைத் தாக்கி விடவேண்டும்.

நாட்டில் அமைதி நிலவவேண்டுமானால் மக்களை மதித்து நடப்பதால் அல்ல, சர்வாதிகாரியாக மன்னன் மாறினால்தான் முடியும். போதிய பொருள் இல்லாவிட்டால், மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது குமுறுவர். அது என்றைக்குமே அரசாங்கத்துக்கு ஆபத்தை விளைவிக்கும். அதனால் மக்கள் மனதிருப்தியோடு வாழ்வதற்கு வழி செய்துவிடவேண்டும். விரோதி ஒருவன், தனக்கு விரோதமாக சதிசெய்தவனாயிருந்தாலும் மன்னன் அவனைத் தூக்கிடலாமே தவிர அவனது மனைவி மக்களும் அவதிப்படும்படியாக குற்றவாளியின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக்கூடாது. அப்படி பறிமுதல் செய்து அந்தக் குடும்பத்தை ஆறாத் துயரத்தில் அமிழ்த்தினால், ஒரு விரோதி ஒழிந்த இடத்தில் அவனுடைய உறவினர் அத்தனை பேரும் விரோதிகளாய் மாறி மன்னனை மாய்க்க சமயம் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்ற காரணத்தால். குற்றம் செய்தவனை தூக்கிலிடுவதை அவன் உறவினர்கள் கூட ஏற்றுக்கொள்வார்கள். அதற்குமேல் சொத்துப் பறிமுதல் செய்தால் விரோதிகள் வளருவதற்கே அது உதவி செய்யும்.

இந்த விதத்தில் வேந்தனுக்கு வேண்டிய காரியங்களை மக்கியவல்லி எடுத்துக் கூறினதிலிருந்து அவர் அரசியல் வேறு, அறம் வேறு இரண்டுக்கும் சம்பந்தம் இல்லை என்று கருதியதாகத் தெரிகிறது. அரிஸ்டாட்டில் அரசியல், அறம் இவை இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைத்தான் ஆராய்ந்தார் ஆனால் மக்கியவில்லி அவை, இரண்டையும் வேறுபடுத்தி, துண்டாடி, அறம், அரசியலுக்குக் கட்டுப்பட்டதாகக் கருதினார். முடிவு அல்லது நோக்கம் நல்லதாயிருக்கும்வரை அதை அடைவதற்கு நேர்மையானதோ அல்லது அதற்கு மாறானதோ, நீதியோ அல்லது அநீதியோ எதுவானாலும் கையாளலாம் என்றார் மக்கியவல்லி.

**மதமும் அரசும்**

நமது நூற்றாண்டுக்கு முன் பல

---

## விருதுநகரில்

அன்பும் பண்பும் நிறைந்தவரான விருதுநகர் எம். எஸ் பி. நாடார் அவர்கள் அண்மையில் காலமான செய்தி அறிந்தோர் யாவரும் நம்மைப்போலவே வருந்தியிருப்பார்கள்.

எஸ். எஸ். பி. அவர்கள் விருதுநகரின் தலைவராகயிருந்து பணியாற்றினார்கள். இப்போது, தந்தையாரின் இடத்துக்கு தனயரான தோழர் எம். எஸ். பி. ராஜா, பிப் 3-ந்தேதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாலிபத் தோழரை துணைத் தலைவர் ராஜம்மாள், ஆசைத்தம்பி, ரத்தினம், உத்தமன், உலகநாதன் முதலிய நகரசபை உறுப்பினர்கள் பாராட்டினர்.

நூற்றாண்டுகளாக, மதமும் அரசியலும் பிரிக்கமுடியாதவாறு பின்னிக்கொண்டிருந்தன. மக்கியவல்லிக்கு அது பிடிக்கவில்லை. இதாலியில் கிருஸ்துவ மதத் தலைவர் போப் இருப்பதால்தான் இதாலியில் ஒற்றுமை ஏற்படுத்த முடியவில்லை என்ற நினைப்பில் அவர் கிருஸ்துவ மதத்தை முன்னேறவிடக்கூடாது என்று முடிவு செய்தார். ஆனால் மக்களை நல்லவர்களாக நடக்கச் செய்வதற்கு ஒரு மதம் நாட்டில் இருக்கவேண்டும். மக்கள் எல்லாம் மத நம்பிக்கை கொண்டிருந்தால் மன்னனுக்கு அவர்களை அடக்கி ஆளுவது சுலபமாக இருக்கும் ஆனால் அந்த மதமும், மத அமைப்பும் அரசுக்கு அடிப்படையாக இருக்கவேண்டும் என்பதே அவர் கொள்கை.

இம்மாதிரி கருத்துக்களை மக்கியவல்லி வெளியிட்டதற்குக் காரணமில்லாமலில்லை. மறுமலர்ச்சி இய்க்கம் ஐரோப்பாவில் ஆரம்பித்த நேரம் அது. மதத்தின் பிடி தளர்ந்துகொண்டிருந்தது மக்களிடையே. ஒற்றுமைக்கு உதாரணமாக இருந்த கிருஸ்துவ மதத்திலிலே உள்ளுக்குள்ளே எதிர்ப்பைக் கிளப்பிப் பல பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள் பிரிவினைக்காரர்கள்.

இதாலியில் ப்ளாரன்ஸ் ராஜ்யத்தை ஆண்ட சவனேரோலா என்ற மன்னன், சத்தியம், நியாயம் நேர்மை இவைகளில் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். மிகவும் நல்லவன். ஆனால் ராஜ்யத்தில் குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்டு அவனால் ஏதும் செய்யமுடியாமல் அழிந்தான் அவனுடன் ராஜ்யம் அழிந்தது — பகைவரால் நிர்மூலமாக்கப்பட்டது. அதற்கு நேர்மாறாக இதாலியில் சிசர் போர்ஜியா என்ற வேறொரு மன்னன் இருந்தான். நேர்மையில் நம்பிக்கையில்லாதவன். அநீதிக்கு இருப்பிடம். வஞ்சகமே உருவானவன். தந்திரத்துக்குத் தாயகமானவன். ஒருவனை அழிக்கும் நோக்கத்துடன் அவனை விருந்துக்கழைத்து விஷமிட்டுக் கொல்லுவது அவனுக்கு விளையாட்டு. நலிந்துகிடக்கும் நாட்டோடு போர் புரிந்து அதைப் பிடிப்பது அவனுக்கு பொழுது போக்கு. மதத்தை தன் மமதைக்கு மண்டியிடச் செய்தான். அவனுடைய பலம் வளர்ந்தது. அவனைக் கண்டு இதாலியே மருண்டது. சிசர் போர்ஜியாவே மற்ற மன்னர்களுக்கெல்லாம் மாதிரியாக இருக்க வேண்டுமென்று கருதினார் மக்கியவல்லி. வெற்றிகரமாக வாழ்ந்த வேந்தன், மக்கியவல்லி பார்த்தளவுக்கு சிசர் போர்ஜியா தான். அதனாலேயே அவனுடைய குணங்கள் எல்லா மன்னருக்கும் இருக்கவேண்டும் என மக்கியவல்லி கருதினார்.

மன்னராட்சி இல்லாவிட்டால் அதற்கு அடுத்தபடியாக குடியரசாட்சியே நல்லது. அதில் நிலச்சுவான்தார்கள் இருந்தால் அவர்களுடைய பேராசை, பணச்செருக்கால் அடிக்கடி குழப்பம் நேரிடும். அதனால் சமத்துவம் நடைமுறையில் இருந்து, பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வே இல்லாத சமூகத்தில்தான் குடியரசு வெற்றிகரமாக இருக்கமுடியும். மேலும், நாட்டுக்கேற்ப மக்களுடைய பண்பு, தரத்திற்கேற்ப ஆட்சி அமையவேண்டும். ஒரு நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்ற ஆட்சி எல்லோருக்குமே ஏற்றதாகக் கொள்ளமுடியாது இதாலியில் ஒற்றுமை காண்பதற்கும், பகைவருடைய பார்வையிலிருந்து அதை மீட்பதற்கும் அங்கு பலமுள்ள மன்னராட்சியே மேலானது என்று குறிப்பிட்டார் மக்கியவல்லி.

கடைசியாக "மன்னராட்சியானாலும், குடியாட்சியானாலும், அரசாங்கம் ஒரு பலமான படையைத் தயாராக வைத்திருக்கவேண்டும். நாட்டுக்கு செல்வம் சேருவதற்கு ஒரு வழி பிற நாடுகளைக் கைப்பற்றிக் கப்பம் வசூலிப்பது. மக்களுடைய மனதைக் கவர்ந்து அவர்கள் சிக்கலான ராஜீய விவகாரங்களில் தலையிடாமலிருப்பதற்கு அவர்கள் பார்த்து வியக்கும்படியான பெரிய திட்டங்களையும் பிரம்மாண்டமான வேலைகளையும் ஆரம்பித்து மக்களால் ஆளுபவர்களுக்கு ஏற்படும் தொல்லையைக் குறைத்துக் கொள்ளவேண்டும்" என்று கூறினார்.

"எவ்விதத்திலும் காரியத்தை சாதிக்கவேண்டும்" என்ற முறையில் காரியவாதியாக ஆளுபவன் இருந்தால்தான் அவனால் அமைதியை நிலைநாட்டமுடியும் என்று சொல்லும்போது ஆளுபவர்களுக்குத்தான் மனச்சாட்சியைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை, நேர்மையைப்பற்றி சிந்திக்கவேண்டியதில்லை என்றாரே தவிர, மக்களெல்லோரும் நேர்மையற்றவர்களாக நன்மையை நீக்கி தீமையைச் செய்ய வேண்டுமென்று மக்கியவல்லி சொல்லவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

(தொடரும்)

## திருமண அழைப்பு

என் இரண்டாவது மகள்

**திருமதி எஸ். துர்காவிற்கும்**

சென்னை

**திரு. கே. வாசுதேவன் அவர்கட்கும்**

**18—2—55** வெள்ளிக்கிழமை காலை 9-மணிக்கு

**அண்ணா அவர்களின் தலைமையில்**

சென்னை-1. வைத்தியநாத முதலி தெரு நெ. 35 எண்ணுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும். அதுசமயம் நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவார்கள். தாங்கள் வருகை தந்து விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்

**போளூர்-சுப்ரமணியன்**

## இரும்பு

**இரும்பு, முதன் முதலாக எகிப்து நாட்டவரால் உபயோகிக்கப்பட்டது-கி. மு. 6500 ஆண்டிலேயே, எகிப்து நாட்டில், இரும்பு உபயோகிக்கப்பட்டதாம்.**

2-ம் பக்கத் தொடர்ச்சி

அதனால், அமெரிக்காவும் ரஷ்யாவும், இதில் யாருடைய செல்வாக்கு அதிகம் என்பதைப் பார்க்கும் இடமாக ஆக்கிவிட்டன.

இதனால், லாபம் நமக்குத்தானே! இருவரும் போட்டிபோட்டுக்கொண்டு, உதவிகளைக் குவித்தால், நமது தேசம் தானே செழிக்கும்!—என்று கேட்கும் அப்பாவிகள், ஏராளம்; எதிர்காலம் பற்றி எண்ணாதவர்கள், அவர்கள்.

•

அகில உலகப் பிரச்னையின் விளைவாக, மாஸ்கோ, டில்லியைப் பாராட்டி அணைத்துக் குலவி, 'பலம்' சேர்க்க வேண்டியிருக்கிறது.

அதனால், இவ்விதமெல்லாம், முன்பு அமெரிக்கர் கையாண்ட பாணியை, ரஷ்யாவும் செய்கிறது.

இது, தவறல்ல. நிச்சயம் தவறே அல்ல. ரஷ்யாவின் நிலை அது. இப்படிச் செய்யவில்லையென்றால், அதற்கு ஆபத்து வரும். அதனால் தட்டிக் கொடுத்து நேசம் பாராட்டுகிறது. இதனால், மாஸ்கோவில் ராட்டை ராஜ்யம் ஏற்பட்டுவிடமுடியாது-அதற்கு ரஷ்யாவும் சம்மதித்துவிடாது. கம்யூனிசம் அரசோச்சும், உள்நாட்டில். வெளிநாட்டில், அதைக் கண்டிப்போராயினும், அவர்களது ஆதரவு தேவைப்படுகிறது.

ரஷ்யாவின் நிலை, அது. அதன் இடத்திலிருக்கும் எவரும் ஆளாக வேண்டிய நிலையும். இதுதான், நல்லவனும் சில வேளைகளில் நாடிட நேருவதுண்டல்லவா, கையாட்களை—அதுபோல.

இதை எடுத்து விளக்கும்போதுதான், இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு எரிச்சல் தரும் விதத்தில் என் நண்பன் கேட்கிறான்.

*

"அண்ணே! தன்னாட்டு கம்யூனிசம் காப்பாற்றப்படணும் என்பதற்கரக, மத்தவங்க எவ்வளவு மோசமானாலும் 'தாஜா' செய்யுது நம்ப ரஷ்யா. ரொம்ப சரி, ரோஜா தோட்டத்துக்குள் குரங்கு நுழையாமலிருக்க, வேலி ஓரத்திலே பட்டாணிக் கடலையை வீசறது மாதிரி. இதிலேருந்து ஒண்ணு நல்லாப் புரியுது. அதாவது, ரஷ்யா, தன்னாட்டிலே உண்டாகி, செடியாகி பூத்திருக்கும் செடிக்கு ஆபத்து வராமல் தடுக்கப் பாடுபடுகிறது. அதனால், வெளிநாடுகளில் தன் கொள்கையைப் பேசிடுவோரைத் தாக்கும் சர்க்காரானாலும், அதை 'இந்திரா! சந்திரா!' என்று புகழ்கிறது. இதுவும் சரிதான். இங்கே இருக்கிறவங்க, 'இவுங்க தேசத்திலே இருக்கிற மக்களுக்கு வயிறார சோறும், உடம்பை மூடத் துணியும், 'இருக்க வீடும் கிடைக்கப் பாடுபடணும்—இதுக்கு எந்த ஆட்சேபணையும் சொல்லவில்லை, ரஷ்யா. தன் வீட்டு வயலிலே இருக்கிற தண்ணி ஓடிடாமே வரப்பு கட்டுறது, தவறில்லேதான். ஆனா, அண்ணே! அது ஏன், இங்கே இருக்கிற கம்யூனிஸ்டுகளுக்குப் புரியலே! நம்ப தேசத்து விஷயத்துக்குத் தகுந்தபடி வேலை செய்வோம்னு சொன்னா உன் மேலே எரிஞ்சு விழுறாங்க! எரிச்சிடறதுபோலப் பார்க்கிறாங்க!"

*

இப்படி, கேட்கும்போதுதான், நமது 'காம்ரேட்' விளங்கவைக்க, அகில உலக அகராதிகளைப் புரட்டி, அது இது என்று பேச முயல்கிறார்.

அந்தக் கட்டம்தான், நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது.

அதோ, ரஷ்யா, தனது நாட்டில் கம்யூனிச மணத்துக்கு மாறான சிறு செயலைக் கூடச் செய்யாமல் அதே சமயத்தில், அகில உலக அரங்கிற்காக, வெளிநாட்டு வீணரைக்கூட, வெற்றி வீரா என்று வாழ்த்துகிறது.

ஆனால், இவர்கள், தனது நாடு என்பதைப்பற்றியே எண்ணாது அகில இந்தியா எனப் பேசி, குட்டையைக் குழப்புகின்றனர்.

திருவாங்கூரிலே, அரசியல், அமளி! பட்டம் தாணு, கொடுங்கோலன் எனும் பட்டத்தைப் பெற்றுவிட்டார்—நாட்டிலேயே மிகப் பிற்போக்கான கட்சியென்று வர்ணிக்கப்படும் காங்கிரசே, அவர் ஆட்சியை அகற்ற பாடுபடுகிறது. அதனை, தமிழ்நாட்டு கம்யூனிஸ்டு சரியானதெனச் சொல்கிறார்! ஆனால், திருவாங்கூர் கம்யூனிஸ்டுக் கட்சி, பட்டம் தாணுவைவிட காங்கிரஸ் மோசம் ஆதலால் பட்டம் தாணுவை ஆதரிப்பதே மேல், எனச் சொல்கிறது! தனது நடவடிக்கைக்கு அதுவும் 'புள்ளிவிபரங்களை'த் தரத் தயாராயிருக்கிறது! திருவாங்கூர் கம்யூனிஸ்டுகள், இந்தக் கட்டத்தில், மீறுகின்றனர்—'அகில'த்தை.

இதேபோல, 'இந்தி' பொது மொழி விஷயத்தில், இந்தியக் கட்சி ஒன்று சொல்லுகிறது — தமிழ்நாட்டு ஜீவாவோ, 'தமிழுக்கே முதலிடம்! தமிழின் புகழை வடித்துக் கொட்ட முடியும், என்னால்!'' என்கிறார், ஆனால் 'அகிலம்' என்கிற போது, அதுவே சரி என்று ஆட்டுகிறார்' தலையை!!

இப்படி, ஏதாவது ஒரு பிரச்னையில், அகில இந்தியக் கொள்கைக்கும், ஒவ்வொரு மாகாணக்கட்சிகளின் போக்குக்கும் இடையே மோதுதல் ஏற்படாமலில்லை — இந்த மோதுதலைக் குறை கூறவில்லை, நாம்! ஏற்படத்தான்செய்யும்-ஏனெனில், ஒவ்வொரு இடமும் ஒரே மாதிரியான சூழ்நிலைகளைப் பெற்றிருக்கவில்லை, இந்தியாவில்.

மாஸ்கோ, கோதுமைதேசம்! ஆனால், அங்கே,சமீபத்தில்குடியரசுதினவிழாக் கொண்டாடியபோது, ரவாலாடும், ஜாங்கிரியும், ஓமப்பொடியும் வைத்து விருந்து நடத்தப்பட்டதாம். தென்னாட்டு பட்சணத்துக்கு இணையுண்டோ? — என்கிறது, ஆனந்த விகடன். மாஸ்கோ தூதர் மேனன், ஒரு தென்னாட்டுவாசி. எனவே, விருந்தில் இடம்பெற்றன இவை!! இப்படி விருந்துவைத்தது, இந்திய கலாச்சாரத்தை வலியுறுத்தும் சின்னம், என்று பெருமைப்படுகின்றனர்—ஆள்வோர். ஆனால் அதிலிருக்கும் மற்றோர் உண்மையையும் உணரவேண்டும்! ரஷ்யாவில்உணவு ரொட்டி, கோதுமை—தென்னிந்தியாவின் உணவு, இட்லி ஓமப்பொடி வடஇந்தியாவில் சாப்பாடு கோதுமை அடை, தித்திப்பு—வங்கத்தில் பார்ப்பனரும் மீன் தின்பதுண்டு-இப்படி உணவு விஷயத்தில் மட்டுமின்றி, உடை விஷயத்திலும் இடத்துக்கு இடம், தேசத்துக்கு தேசம் மாறுபாடுகள் இருக்கின்றன! ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமிடையே என்று மட்டுமல்ல— இந்தியாவுக்குள்ளேயே, இந்த வித்தியாசங்கள், ஏராளம்இருக்கின்றன.

இப்படியிருக்கும் போது, இங்குள்ள கம்யூனிஸ்டுகள் மட்டும், எதையெடுத்தாலும் 'அகில இந்தியக் கட்சி' 'அகில இந்திய ரீதியில்', ஒட்டுமொத்த சமூகம் என்றெல்லாம், ஏன் பேச வேண்டும் — அகில இந்தியாவை, வைத்தே தங்கள்கொள்கைகளை எதற்காக வரையறுத்துக்கொண்டு, அவதிப்படவேண்டும்.

அதோ ரஷ்யா சொல்கிறதே செயல் மூலமாக! அகில உலகம் பேசிய அதுவே, மாறுகிறதே நிலைமைக்கு ஏற்றபடி!!

அதனை, எல்லா வகைகளிலும் பின்பற்றுவதாகக் கூறிடும் கம்யூனிஸ்டுகள், இந்த விஷயத்திலும் பின்பற்றினால், என்ன?

இதைத்தான், 'சராசரி வர்க்கத்தார்'கள் கேட்கின்றனர் — நாடு, வளம் பெறுமே; நமது காரியங்களை, நாம் செவ்வனே செய்து கொண்டு, பிறகு 'அகிலம்' பற்றி ஆராயலாமே எனும் ஆசையில்.

அன்பர்களோ சீறுகிறார்கள்! பதறுகிறார்கள்!!—அவர்களுக்கு அன்புடன், தெரிவிக்கிறோம்— மாஸ்கோவைப் பாரீர்! மனக்கண்ணால் பாரீர்!!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.